திருக்கோயில்

ஏப்ரல் 1992

விலை ரூ. 3



திருக்கோயில்

பதிவு எண். எம். 7039

அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்திற்கு சிவராத்திரியன்று மேதகு தமிழக ஆளுநர் திருமிகு பீஷ்மநாராயணசிங் அவர்கள் வருகை புரிந்து தரிசனம் செய்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் துணைஆணையாளருமான திரு கு. சிதம்பரம், பி.ஏ., மேதகு தமிழக ஆளுநர் அவர்களை வரவேற்று உபசரிக்கிறார்கள்.

முகப்பு:
மயிலை
அருள்மிகு சிங்காரவேலர்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை. 34	திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கிரச ஆண்டு சித்திரை ஏப்ரல் 1992 விலை ரூ. 3-00	மணி: 4

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

பொருளடக்கம்

திருக்கோயில்களைச் சீரமைப்போம்
— மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

அருளாளர்கள் அருள் அனுபவம்
— திருமந்திரச் செம்மல்
டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.

தெய்வத் தமிழகத்தில் ஷண்மத வழிபாடு
— ஆணையாளர் சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ்.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

ஸ்ரீவாமனாவதாரம்
— ஜெயஸ்ரீ மூகாம்பிகா

தோணியப்பர்
— ஞானச்சேரி ஞானிகள்

மயிலையில் மாண்புற்ற அறுபத்திமூவர் விழா
— டாக்டர் த. அமிர்தலிங்கம்.

லிங்கபுராணம்
— டாக்டர் இரா. நாகசாமி

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருககிருபானந்தவாரியார்

சித்திரபாரதம்
— செவ்வேள்

வாசகர் எண்ணங்கள்.

தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

திருக்கோயில்களைச் சீரமைப்போம்

மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

[2-3-92 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரிய முதற்கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி பின்வருமாறு :]

தமிழகத் திருக்கோவில்கள் தொன்மையானவை. அவை தெய்வீக வழிபாட்டு திருத்தலங்கள் மட்டுமின்றி நம் பண்பாட்டுச் செழுமையையும், வரலாற்றுச் சிறப்பினையும், நமக்கு இன்றும் எடுத்துரைக்கும் அரிய கலைச் செல்வங்கள். தமிழகத்திலுள்ள திருக்கோவில்களை ஒருமுறை தரிசித்து வந்தாலே தமிழகத்தின் பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் பின்னணியை நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும். நம்முடைய முன்னோர்களின் உழைப்பின் பயனாகவும், அவர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சிகளின் பயனாகவும் அவைகள் தோன்றி வளர்த்துள்ளன.

அத்தகைய திருக்கோவில்கள் ஒவ்வொன்றும் நம் முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள அரிய கலைப் பொக்கிஷங்களாகும். சரித்திரப் புகழ்பெற்ற தொன்மையான நமது சமூகத்தின் பண்பாட்டு நிலைக்களன்களாகவும், நாகரீகத்தின் சின்னங்களாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும் அவை இன்றும் விளங்குகின்றன.

தொன்று தொட்டு, நமது கலாசாரக் கருவூலமாக விளங்குகின்ற நமது திருக்கோவில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு இந்தியருக்கும் உண்டு.

இந்த அடிப்படையில் எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கோவில்கள் சீரமைக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தோம். நமது வருங்கால சந்ததியினருக்கு இந்த கலைச் செல்வங்களை அழியாது பேணிப் பாதுகாத்து கொடுக்க வேண்டுமென்ற மாபெரும் கடமையை ஆற்றத்தான், எங்கள் முக்கிய தொடர் நடவடிக்கையாக மாநில அளவிலான திருக்கோவில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது.

இந்தத் திருக்கோவில் நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டத்திற்கு வருகை வந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் உள்ள பல புராதன திருக்கோவில்கள் நிதி பற்றாக்குறையின் காரணமாக பராமரிப்பின்றி உள்ள நிலையை அறிந்து அவைகளை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளதேவையானநிதி ஆதாரத்தைப் பொது மக்களிடமிருந்து பெறும் வகையில், ''தமிழக முதல்-அமைச்சரின் திருக்கோவில் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி'' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய தினம் (2-3-92) வரை இந்த

அருள்மிகு



கபாலீசுவரர் திருக்குளச் சீரமைப்பு

பல ஆண்டுகளாக அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோவில் தெப்பத் திருவிழாவுக்கு குளத்தில் நீர் இல்லாததால் குளம் பயன்படுத்த முடியாத நிலைமையில் இருந்து வருகிறது. 630 அடி நீளமும் 475 அடி அகலமும் 18.5 அடி ஆழமும் கொண்ட இப்பெரிய குளத்திற்கு நீர் வரத்து இல்லாமையால் வறண்டு கிடக்கின்ற நிலைமையைச் சீரமைத்து தண்ணீர் நிரப்பி, நிறுத்தி வைப்பதற்கும் நீரைச் சுத்தம் செய்வதற்கும் சுழற்சி முறையில்தூய்மைபடுத்துவதற்காகவும் ரூ. 1 கோடிக்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்ட திட்டமாக சீரமைப்பிற்காக உடனடியாக நடவடிக்கை தொடங்கப்பட ரூ. 35 இலட்சத்திற்கு வாரியம் அனுமதி அளித்துள்ளது. அடுத்த ஆண்டு தை மாதத்தில் நடைபெற உள்ள தெப்ப உற்சவம் நடத்துவதற்கு ஏதுவாக இந்தப்பணி செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

—மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

நிதியில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் சேர்ந்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிர்வாக வாரியம் அமைப்பதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட சட்டத்தின் சட்டப் பிரிவுகள் மற்றும் விதிகளின்படி இந்த நிர்வாக வாரியம் தனது கடமையை இன்று முதல் தொடங்குகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த 8 மாத காலத்தில் திருக்கோவில்களின் திருப்பணிக்காக 12 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் அரசு மான்யமாகவும், முதல்வரின் திருக்கோவில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து 5 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாகவும் அளிக்கப்பட்டு 11 திருக்கோவில்களில் முழுமையாக திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாமக திருவிழா சம்மந்தப்பட்ட திருக்கோவில்களின் பராமரிப்புக்காக 46 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு மகாமக தீர்த்தவாரி விழா சைவத் திருக்கோவில்கள் மகாமகத் திருக்குளத்திலும். வைணவத் திருக்கோவில்களுக்கு காவிரிக் கரையில் அமைந்துள்ள சக்கரப்படித் துறையிலும், 18-2-1992 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகம் மேலும் சிறப்புடன் அமைவதற்காக புதிதாக வேலூரை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆணையர் அலுவலகமும், சிவகங்கையை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆணையர் அலுவலகமும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்கு குளிர் சாதன வசதி அமைத்துத்தர அரசு ஆணையிட்டுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோவில் நடத்தி வரும் பாலிடெக்னிக்குகளுக்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு 46 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயும். அவற்றுக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு 75 லட்சத்து 9 ஆயிரம் ரூபாயும் உலக வங்கியிடமிருந்து கடன் உதவியாகப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோவில் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபாய், இந்த அரசு பொறுப்பேற்ற பின் 20 ஆயிரம் ரூபாயாகஉயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஓதுவார்களுக்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்த 250 ரூபாயை, 300 ரூபாயாக உயர்த்தி வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

மேலும் வேதபாராயணம் செய்பவர், நாலாயிரதிவ்வியபிரபந்தம் ஓதுவோர், அரையர் சேவை செய்பவர் ஆகியவர்களுள் ஒவ்வொரு ஆண்டும் பணியில் இருந்து ஓய்வு பெறும் 100 நபர்களுக்கு மாதம் 300 ரூபாய் வீதம் ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

1992-ஆம் ஆண்டில் திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, பொங்கல் பரிசாக முதுநிலை பணியாளர்களுக்கு 350 ரூபாயும், முதுநிலை அல்லாத பணியாளர்களுக்கு 300 ரூபாயும் வழங்கப்பட்டது.

நான் ஏற்கனவே சட்டமன்றத்தில் அறிவித்தவாறு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்றினை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுவாக இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் மக்களிடையே திருக்கோவில்களில் திருப்பணி செய்ய வேண்டுமென்ற ஒரு விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டு பல திருக்கோவில்களில் தற்போது திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக, எந்த ஒரு கட்டத்திலும் திருக்கோவில் சொத்துக்களை நீண்ட கால குத்தகைக்குவிடக் கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. நீண்ட கால குத்தகையில் இருக்கும் கோவில் சொத்துக்களைத்திரும்பப் பெறவும், அல்லது நியாயமான வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளினால் திருக்கோவில் நிலங்கள் பாதுகாக்கப்படுவதுடன் அவைகளில் இருந்து கிடைக்கும் வருமானமும் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படவுள்ளது.

பக்தர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக இந்த வாரியம் அனைத்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதனை இங்கே தெரிவித்து, மதிப்பிற்குரிய வாரிய உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று, இங்கு விவாதிக்க உள்ள பொருள்களின் மீது தங்களின் மேலான கருத்துகளையும் ஆலோசனைகளையும் நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் திருக்கோயில்கள் நிர்வாகவாரிய உறுப்பினர்களாக உள்ள மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திருமிகு செங்கோட்டையன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு ஆனந்தன், இந்து சமய அறநிலையத்துறையின் செயலாளர் திருமிகு தங்கராஜ், ஆணையாளர் சுகவனேஸ்வர், அலுவல் சார்புள்ள உறுப்பினர்களான தலைமைச் செயலாளர் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள், தலைமை பொறியாளர் (கட்டிடங்கள்), தொல் பொருள் ஆய்வுத் துறை இயக்குனர், மற்றும் அலுவல் சார்பு அல்லாத உறுப்பினர்களான காஞ்சீபுரம் தொண்ட மண்டலம் ஆதீனம், திருமிகு டி.எஸ் சந்தானம் அவர்கள், திருமிகு எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், அல்லூர் விசுவநாத சிவாச்சாரியார், மத்திய அரசாங்க முன்னாள் சட்டஆலோசகர் திருமிகு பராசரன் அவர்கள், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் நாங்குனேரியைச் சேர்ந்த வானமாமலை ராமானுஜ ஜீயர் அவர்கள், அக்னிகோத்ரம் ராமனுஜ தாத்தாச்சாரியார் அவர்கள், இராமநாதபுரம் ராணி டி. இந்திராதேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாசகர் எண்ணங்கள்

திருமந்திரச் செம்மல் அருளாளர் தலைமைச் செயலாளர் **திருமிகு டி வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**. அவர்களின் ''அருளாளர்களின் அருள் அனுபவம்'' கட்டுரையைத் தொடர்ந்து படித்து வருகின்றேன். தில்லையம்பலவர் திருநடனம் கண்டு அனுபவித்த நாயன்மார்களின் அருள் அனுபவத்தைத் திருமந்திரச்செம்மல் விவரித்த பாங்கு கற்றோர் உளம் கசிந்திருகும் வண்ணம் அமைந்திருந்தது.

''கடலின் மடை விண்டதென்ன-இரு
கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய
உடலும் புளகித மாக-என
துள்ளம் உருக உபாயம் செய்தாண்டி''

என்ற தாயுமான சுவாமிகளின் ஆனந்தக்களிப்பு பாடலின் அற்புத விளக்கம் என்றே 'அருளாளர்களின் அருள் அனுபவம்'' கட்டுரைத் தொடரைப் போற்றுதல் வேண்டும்.

—புலவர் வெற்றி வடிவேலன்,
அம்மாப்பேட்டை, சேலம்.

() () ()

அன்புள்ள டாக்டர் அமிர்தலிங்கம்

வாழ்த்துக்கள். திருக்கோயில் இதழ்மேலும் மேலும் சிறப்பாக வளர்ச்சி பெற்று வருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதழில் **திருமந்திரச்செம்மல் டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,** முதலான சான்றோர்களும் அறிஞர்களும் தொடர்ந்து எழுதி இதழை அழகு செய்வது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது. பல இன்றியமையாத நல்ல செய்திகளைத் தாங்கி வருகின்ற திருக்கோயில் மேலும் மேலும் உயர்வும் சிறப்பும் பெற வேண்டும் என்று விரும்புகிறேன். நல்ல கட்டுரைகளை வழங்கிவரும் சான்றோர்களுக்கும் அறிஞர்களுக்கும் ''திருக்கோயில்'' நன்றி பாராட்ட வேண்டும். வாழ்த்துக்கள்.

— அன்புள்ள
பொற்கோ
(டாக்டர் பொன். கோதண்டராமன்,
பேராசிரியர்-தலைவர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

() () ()

இறையருள் கருத்து தொடரட்டும்
''திருக்கோயில்'' பணிகள் படரட்டும்

—கவிஞர் ஏ. வாசுதேவன்.
இன்பவல்லி,
சென்னை—116.

அருளாளர்களின்

அருள் அனுபவம்

திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.

(10)

'திருமந்திரச் செம்மல்'

திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

அருளாளர்கள் அனைவருமே ஒப்பற்ற யோகிகள் ஆவர். பாச நீக்கம் பெற்று சிவப்பேறு அடைந்தவர்கள். உயிர் இயல்பாகவே பின்தொடரும் பற்று எனும் தன்மையை கைவிட்டவர்கள். இன்ப துன்பங்களை ஒன்றாகக் கருதுபவர்கள். எப்போதும் மனக்கலக்கம் அடையாமல் நிற்பர். வறுமையில் சோர்வடைய மாட்டார்கள். செல்வத்துள் அழுந்தவும் மாட்டார்கள். நோய்கள் அவர்களை வாட்டாது. குன்றைப் போல மனவலிமை பெற்றவர்கள். சுகங்களில் தங்கள் கருவிகளைப் பறிகொடுக்கமாட்டார்கள். ஒன்றிலும் பற்றுதல் அற்றவர்களாக இருப்பார்கள். என்றும் சிவானுபவத்தில் ஆழ்ந்து நிற்பார்கள். சிவமாம் தன்மையை அவர்கள் பெற்ற காரணத்தினால், அவர்கள் சிவத்தைத் தேடி அலைய வேண்டியதில்லை. **'வணங்க வேண்டா இனி வடிவை அறிந்தபின்'** என்பார் திருமூலர்.

உயிரானது கருவி கரணங்களைச் சதா பயன்படுத்துகின்றது. இந்தக் கருவி கரணங்கள் யாவும் எப்பொழுதும் புறத்தே சென்று உயிருக்கு அறிவைக் கொடுக்கும். அந்த அறிவினைச் சார்ந்து, அறிவினைக் கொடுக்கும் பொருள்களில் ஒன்றிப் பொருந்தி நின்று அந்த உணர்விலே உண்மையைக் காண முயல்வது உயிரின் இயல்பாகும்.

''பற்றிடும் கருவி யாவும் படர்ந்துஉணர்வு
அளிக்குங் காலை
உற்று அறிந் திடுவதுஒன்றின் உணர்வினின்
உண்மையாகும்''

என்கிறது சிவப்பிரகாசம்.

இந்த நிலையில் உயிருக்குத் தன்னை அறியும் வாய்ப்பு இல்லை. பகலில் எரியும் விளக்கின் ஒளி போல தன்மை கெட்டு அடங்கி நிற்கும். இது பிறப்பின் சூழ்ச்சியால் ஏற்படுகிறது. பிறப்பின் சூழ்ச்சிக்கு முன்னம் வினைகளே காரணமாகும். வினைகளை ஈட்டியும், ஈட்டிய வினைகளின் பயன்களை நுகர்ந்தும், மீண்டும் மீண்டும் வினைகளை சேர்த்துக் கொள்ளுவதும் ஒருவித மயக்கத்தால் நடைபெறுகின்றது. இதனை மாயப் பிறப்பு என்பார் மணிவாசகப் பெருமான். ''மாயக்குழியில் விழுவர் மனைமக்கள்'' என்றார் திருமூலர்.

மயக்க நிலையாயினும் இந்த நிலை பயனற்ற நிலையாகாது. பயனுள்ள நிலையே ஆகும். கருவி கரணங்களின் சேர்க்கை இல்லாத உயிரானது கேவல நிலையில் இருளில் மூழ்கிக் கிடக்கும். தன்னுள் வீற்றிருக்கும் பரம்பொருளின் ஒளியை அறியாது. அறிய வாய்ப்பின்றி, அறிவதற்கான கருவி கரணங்களின்றி செயலற்ற நிலையில் கிடக்கும். இது விரும்பத்தகும் நிலையும் இல்லை. ஆகவே, தன்னைப் பற்றி உணர்ந்து தன் நிலையைத் தெரிந்து கொண்டு, தன்னுள் உயிருக்கு உயிராய் நிற்கும் பரம்பொருளின் தன்மையையும் உணர்ந்து கொண்டு, சிவப்பரம்பொருளின் திருவடிகளில் தன்னைச் சேர்த்துக் கொள்ளுதலே உயிரின் இயல்பான நோக்கமாகும். பிறந்த குழந்தை தாயின் அரவணைப்பின்றி வளராது

போய்விடும். அதே போன்று இருளில் மாய்ந்து கிடக்கும் உயிரானது இறை அருளின் துணையின்றி தன்னை உயர்த்திக் கொள்ள முடியாது. அந்த இறை அருளால் உயிருக்கு உடல் கிடைக்கின்றது உடலைச் சார்ந்த கருவிகள் கிடைக்கின்றன. கருவிகள் மூலமாக உயிரினுடைய அறிவும் ஆற்றலும் சற்று செயல் வடிவம் பெறுகின்றன.

அறிவும் ஆற்றலும் கருவி கரணங்களின் வாயிலாக புறத்தேயுள்ள அனுபவங்களில் செலுத்தப்படுவதால், அந்த அனுபவங்களே முழுமையானதென உயிர் கருதும் தன்மையைப் பெறுகின்றன. இந்த நுகர்ச்சிகள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன.

முதலில் விழிப்பு நிலை. விழிப்பு நிலையில் எல்லாக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. விழிப்பு நிலையில நூற்றுக்கணக்கான புறக் காட்சிகள் நம்மைத் தாக்குகின்றன. ஆனாலும் எலலாக் காட்சிகளிலும் மனமானது தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. எந்த ஒரு பொருளின் மீது மனம் தீவிரப் பற்றினைக் கொள்கிறதோ அந்தப் பொருளின் மீது முழுமையான நாட்டத்தைச் செலுத்துகிறது. மற்றவைகளைத் தனது கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. இது நம்முடைய அன்றாட அனுபவமாகும். இசை நிகழ்ச்சியில் மூழ்கி இருப்பவர்களுக்கு வேறு எந்த எண்ணங்களும் தோன்றுவதில்லை. பரம் பொருளைப் பற்றித்தீவிரமாகசிந்திக்கும் யோகிகளுக்கு வேறொரு பொருளும் மனதில் எழுவதில்லை. விழிப்பு நிலையில் இருபத்தைந்து கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன என்கிறார் திருமூலர்.

அவை ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, வாயுக்கள் பத்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கு, புருடன் என்னும் கருவிகளை நடாத்திச் செல்லும் ஆன்மா ஒன்று ஆக இருபத்தைந்து ஆகும். அதாவது உயிரானது உடலை முழுமையாகப் பற்றி எல்லாவிதமான கருவி கரணங்களைப் பயன்படுத்திக் கொள்வது விழிப்பு நிலையில் ஏற்படுகிறது. தான் சார்ந்த பொருள்களின் தன்மையை பற்றிக் கொள்ளும் இயல்பினை உயிரானது பெற்றிருப்பதால், கருவி கரணங்கள் புறத்தே நோக்கிச் செலலும்போது உயிரும் புறத்தே நாடிச் செல்லுகின்றது. இதை ''முகக்கண்'' பிரயோகம் என்பர் யோகியர். இதுவே மருள் நிலையும் ஆகும்.

விழிப்பு நிலையை அடுத்து கனவு நிலை, கனவு நிலையில் எல்லாக் கருவிகளும் செயல் படுவதில்லை. குறிப்பாக ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள் போன்றவை ஒடுங்கிநிற்கும் நிலையாகும். இந்த நிலையில் உட்கருவிகள் தொடர்ந்து பணியாற்றும். கனவில் நடப்பது உண்மை போலவே தோன்றும். விழிப்பு நிலையில் ஏற்படும் அனுபவங்களுக்குப் பல்வேறு காரணங்களால் மனம் இடம் கொடுக்காத பொழுது, கனவு நிலையில்இந்த அனுபவங்கள் மனத்திரையில் நிறைந்து மறைகின்றன.

அடுத்து ஆழ்ந்த உறக்க நிலை. இந்த நிலையில் கருவி கரணங்களின் இயக்கம் ஒடுங்கி இருந்தாலும், உயிரானது உடலில் தங்குவதற்கான செயல்களெல்லாம் நடைபெறும். ஆகவே தான், விழித்தவுடன் உயிரானது தொடர்ந்து உடலில் தங்கி அனுபவிக்கும் தன்மையைக் காணலாம்.

அதற்கடுத்தாற்போல் துரியம் என்றும் துரியாதீதம் என்றும் உள்ள நிலைகளை யோகிகள் தம்முள் பலவாறு அனுபவிக்கின்றனர். மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் துரிய நிலையிலும், துரியாதீத நிலையிலுமே நிற்பார்கள். அவர்களுடைய அறிவு உள் அறிவாகும்.

''ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னான்கிற் கண்டங்
கனாவென்பர்
பொய்கண் டிலாத புருடவித யஞ்சுழுமுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே''.
(திருமந்திரம்.....2142)

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது, உயிரானது உடலாகிய கோட்டையிலே கருவி கரணங்களுடன் கூடியும், அவற்றை விட்டும் ஓடிக்கொண்டே இருக்கின்றது. விஷய அனுபவங்கள் கருவி கரணங்களை வலிமையாகத் தாக்குவதால், அவற்றுடன் கூடியிருக்கும் உயிரும் தன்னை உயர்த்திக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பதை உணர்ந்து கொள்வதில்லை. ஐந்து இந்திரிய சக்திகள் வஞ்சனை புரிந்து, மனதிலே ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி மாயை இருளில் உயிரினைப் புகுத்தி, பரம்பொருளின் சேர்க்கையைத் தவிர்த்து வைப்பதால் ஏற்படும் அல்லலை — துன்பத்தை மாணிக்கவாசகர் உள்ளம் உருகப்பாடுகின்றார்.

''மறைந்திருந்தாய் எம்பெருமான்
வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச்செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி''
(சிவபுராணம்)

என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

ஒரு பிறப்பில் பரம்பொருளின் பேரருள் உயிருக்குக் கிட்டுகிறது. உலகத்தை, உடலை

பிசாசைத் துரத்து.....!

பேசா இடும்பைகள் பேசி சுத்தப்
பேய்அங்க மாகப் பிதற்றித் திரிந்தேன்
ஆசாப் பிசாசைத் துரத்தி—ஐயன்
அடியிணைக் கீழே அடக்கிக்கொண்டாண்டி.

—தாயுமான சுவாமிகள்.

உயிராகக் கருதுதல் மடமை என்கிற உணர்வு ஏற்படுகிறது. உடம்பு சடப்பொருள். அதற்கு அறிவு, இச்சை, செயல்கள் இல்லை. உயிருக்கே அறிவு, இச்சை, ஆற்றல் போன்றவை உண்டு. உயிர் கண்ணால் காணப்படும் பொருள் அல்ல. ஆனாலும், காணப்படும் உடம்பின் செய்கைகளிலிருந்து காரணமாகிய உயிர் நிச்சயிக்கப் படுகின்றது. மயக்கம் நீங்க நீங்க அனுபவ முறையில் இந்த உயிரினை நடத்திச் செல்லுவது சிவம் என்னும் உண்மை புலப்படுகின்றது. ஆன்மா அல்லது உயிர் உடலில் அழுந்தி, ஜீவித்து சுகித்திருப்பது அறிவின் ஒரு நிலையாகும். பரம்பொருளை உணர்ந்து, பரம்பொருளில் அடங்கி நிற்றல் அறிவின் வேறு நிலையாகும். இறைவன் உயிரோடு கூடி உயிராக நிற்கின்றான். அப்படி இல்லையென்றால் உயிரானது எதனையும் விரும்பி அனுபவிக்கும் ஆற்றல் பெறாது. ஐம்பொறிகள், புலன்கள் ஆகியவற்றிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, தன்னை அறிவென்றும், பேரறிவே தன்னோடு கலந்து நிற்கின்றது என்றும் உணர்ந்திருப்பதே யோக நிலையாகும்.

''அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சாது இருந்து உணர்ந்து உந்தீபற
துய்ய பொருள் ஈதென்று உந்தீபற''
(திருவுந்தியார்)

இத்தகைய அறியும் நிலையை ஆன்மா இறை அருளால் பெறுகின்றது. எவ்வாறு? படிகக்கல் வெண்மை நிறம் கொண்டது. ஆனாலும், சூரியனின் தோற்றம்முன் பல வண்ணங்களை தன்பால் காட்டுகிறது. மறுபடியும் சூரியன் உச்சி வேளையில் நிற்கும பொழுது, மீண்டும் தனது இயல்பான வெண்மையையே காட்டுகின்றது. அதே போல, இறைவனும் உயிருக்கு தன்னை அறிந்துகொள்ளும் சக்தியை அளிக்கின்றான். பொருளை தன்னிடமிருந்து வேறாக தெரிந்து கொள்ளவும் உதவுகிறான். தன்னுடைய இந்த அறியும் சக்தியும், பரம்பொருள் தன்னொடு இருப்பதால்தான் பெற முடிகின்றது என்பதையும் உணர்த்துகின்றான்.

''தன்நிறமும் பல்நிறமும் தான்ஆம்கல்
தன்மைதரும்
பொன் நிறம்போல்மன் நிறம்இப் பூ''.
(திருவருட்பயன்)

இன்று அருள் உள்ளத்தில் பதியப் பதிய இந்த உயிரின் அறிவு நிலைகளில் மாறுதல்கள் தோன்றுகின்றன. இந்த மாறுதல்கள் எளிதாக வந்து விடுவதில்லை. பிறவிப்பயன், வினைகள் அடங்குதல், குரு அருளின் வீழ்ச்சி, உடலின் மீது உள்ள பற்றினை நீக்குதல், உள்ளத்திலே தான் வணங்கும் தெய்வத்தின்பால் ஆழ்ந்த அன்பு, இதுகாறும் தான் நடாத்திய வாழ்க்கையைப்பற்றித்தானே நொந்துகொள்ளுதல், குறைகளைக் களைந்து சிவனவன் திருவடிகள் சேர வேண்டும் என்கிற சொல்லொணாத ஆவல், தான் செய்த பாவங்களுக்காக தன்னைத் தானே ஏசிக்கொள்ளுதல், எதிர் காலத்தில் பிறவிக் கடலைத் தாண்ட இறையருள் ஒன்றே உறுதியான தோணி என்ற நம்பிக்கை, திருமுறைகளைக் கற்றோதல், சிவ பூசை செய்தல், புறத்தேயும் அகத்தேயும் பரம் பொருளின் அருள் நிலையைக் கண்டு எண்ணி எண்ணி வியத்தல் போன்ற பல படிகளை உயிர் கடந்த பின்னரே அருளது நிலையில் உள்ளத்திலே ஓர் மாறுபட்ட உணர்வு தோன்றுகிறது. இந்த நிலையை அடைய பல ஆண்டுகள் ஆகலாம். பல பிறவிகள் எடுக்க நேரிடலாம். ஆபினும், ஒவ்வொரு உயிரும் இந்த நிலையை வந்தடைவது திண்ணம். கண்ணப்பர் போன்ற ஒப்பற்ற அடியார்கள் ஒரே பிறவியில் இந்தப் பேறினைப் பெறுகின்றனர். இறைவன் அவர்களை ஆட்கொள்கின்றான். சிக்கெனப்பிடித்து ஆட்கொள்கின்றான். அந்தஉள்ளங்களிலேமூடிக் கிடந்த சிவப்பண்புகள் ஒளிவிட்டு பிரகாசிக்கத் தொடங்குகின்றன. அவர்களைச் சேக்கிழார் பெருமான் **''கோதிலாத குணப்பெரும் குன்றனார்''** என்பார். இவர்களே ''தன்னைஅறிந்திடும் தத்துவஞானிகள்'' (திருமந்திரம்) ஆவர். இவர்கள் பெறுவது சொல்லொணா இன்பம். தாயுமானசுவாமிகள்தனது உள்ளக்கிடக்கையை வெகு நுட்பமாக வெளியிடுகின்றார்:

''மோகமாதி தரும் பாசமானதை
அறிந்து விட்டுஉனையும் எனையுமே
முழுதுணர்ந்து சுகமான இன்ப வெளம்
மூழ்க வேண்டும்''.

இந்த இன்ப உணர்ச்சி உள்ளத்திலே ஏற்படுகின்றது. இந்திரியங்கள் செயல்படாது அடங்குகின்றன. ஆமையானது தனது உறுப்புகளைத் தன்னுள் அடக்குவது போன்ற நிலையாகும். உள்ளத்திலே ஓங்காரமான ஒளிமயம் தோன்றும். நான் என்கிற நினைப்பு அறவே ஒழிந்துவிடும். அது ஒழிந்ததைக்கூட நாம் அறிய மாட்டோம். எஞ்சி நிற்பதெல்லாம் ஞானானந்த மயமே.

''ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும் .
ஓமய மூற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே''.
(திருமந்திரம்... 2158)

இதைத் ''தூங்காமல் தூங்கும் சுகம்'' என்பர் யோகியர். புலன்களை அடக்கி முக்தி தரும் ஞான மொழி எனும் வித்தை உள்ளத்திலே பதித்து, இறை அன்பெனும் நீரை அதன் மீது பாய்ச்சி, எல்லாம் சிவன் செயல் என்றிருந்து, முக்தியான வித்து வளர்ந்து, ஆன்மீக மரமாகப் படர்ந்து, சிவத்தைத் தன்னுள் கொண்டும், சிவத்தைஎல்லாவற்றிலும்பார்த்து எல்லா சீவராசிகளுக்கும் தன்னுடைய அன்பை பகிர்ந்தளித்தும் செய்யும் செயல்களெல்லாம் யோகியர் செயலாகும்.

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச்
சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்''

''நீங்காச் சிவயோகநித்திரைகொண்டேயிருந்து
ஏங்காக்கருணை வெள்ளந் தேக்குவது
மெக்காலம்''
(பத்திரகிரியார்)

நமது உணர்வுகள், ஆராய்ச்சி உணர்வு அனுபவ உணர்வு என்று இரண்டு வகைப்படும். பகுத்தறிவைத் தூண்டி, ஞான நூல்களைக் கற்றுத், தத்துவங்கள் இன்னதென தெரிந்து கொண்டு, தனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை, மனம், புத்தி போன்றவற்றால்அறிந்து அந்த அறிவால் தான் என்கிற முனைப்போடு, இறை உணர்வினைத்தம்முள் எழுப்பிக் கொள்வது ஒரு வகை. பிறவிக் கடலை ஓரளவுக்கு நீந்திக் கடக்க இது வகை செய்யும். ஆனால், எண்ணிறைந்த, விண்ணிறைந்த பரம்பொருளின் திருவடிகளில் என்றுமே தங்க, இறப்பு, பிறப்புகளை முழுவதுமாகத் தாண்ட வேண்டியுள்ளது. அதற்காக நாம் பெற வேண்டிய ஞானம் இறைவனின் திருவருளால் ஏற்படுகிறது. மயக்கத்தைக் கடக்க வேண்டும். 'யாதும் உறங்காதே' என்கிறது திருக்களிற்றுப் படியார். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஓரளவு எல்லாவற்றையும் தெரிந்துகொண்டதாக நம் உள்ளத்திலே ஏற்படும் எண்ணமும் நம்மை சரியான பாதையில் அழைத்துச் செல்லாது. ஆகவே, அதைய் ''உணராதே'' என்கிறது திருக்களிற்றுப்படியார். ''நீ பொதுவே நிற்கின்'' என்றும் அறிவுறுத்துகிறது.

எண்ணங்களின் அசைவை அடக்கி, உள்ளத்துள்ளே தனது பார்வையைத் திருப்பி, மெல்லக் கனலை எழுப்பி, கள்ளப் புலன் ஐந்தையும் கடிந்துவிட்டு, தனது நாட்டத்தையெல்லாம் சிவப்பரம்பொருள் மீது வைத்து, அங்குமிங்கும் தேடிக்கொண்டிராதபடி, ஒரே இடத்தில் தனது கவனத்தைச் செலுத்தி விழிப்போடு இருப்பவர்கள் சிவக்கனியைப் பெற்று, சார்பு கெட, பூதம் கலங்கினும் அசைவற்று இருப்பார்கள் என்கிறார் திருமூலர்.

''பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட
வாயுவைத்
தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே''.
(திருமந்திரம்.624)

இதுவே துரிய நிலையாகும். விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் போன்ற நிலைகளில் எல்லாம் யோகியர் துரிய உணர்வுடனேயே தான் பார்ப்பார்கள். ஐம்புலன்களுடைய சேட்டைகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய உணர்வுகள் உறங்குகின்றன. இறை அருளைப் பொறுத்தவரை, அவர்களுடைய

உணர்வுகளெல்லாம் விழித்த நிலையில் ஒளி விட்டு நிற்கின்றன.

''நித்திரை கெட்டு நினைவோடிருப் போர்க்கு
முத்திரை ஏதுக்கடி-குதம்பாய் முத்திரை
ஏதுக்கடி''

என்பார் குதம்பைச் சித்தர்.

கருவி கரணங்கள் கழட்டி விடப்பட்ட நிலையில், சுத்தாவத்தை தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும். இறை அருளுடன் கூடி நிற்கும். அவர்கள் பார்க்கும் பார்வையெல்லாம் இறை உணர்வோடு காணப்படும். நனவிலும் சரி, கனவிலும் சரி, ஆழ்ந்த உறக்கத்திலும் சரி, அஞ்ஞானம் நீங்கிய நிலையில், யோகியர் கருவி கரணங்களைத் தம்வசம் கொண்டு வந்து பரம்பொருளின் தரிசனத்திற்காகவே அவற்றை ஈடுபடுத்துவர். தனது உயிர் அறிவு மயம் என்று கண்டு கொள்வர். அந்த அறிவுக்கு அறிவாய், இறை ஒளி எங்கும் பிரகாசமாய், வியாப்பியமாய் நிற்பதைக் காண்பர். அந்தப் பேரறிவின் வியாபகத்தில் அடங்கி நிற்பதே நிர்மலமான நிலை என்பதை அவர்கள் உணருகின்றார்கள். அவ்வாறு உணர்ந்து நிற்றல் துரிய நிலையாகும். ஆன்ம தரிசனம் பெறுவது ஒரு படி. ஆன்ம தரிசனம் பெற்று, சிவ வியாபகத்தில் பொருந்தி நிற்றல் எல்லாவற்றிற்கும் மேலான நிலையாகும்.

''உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே''.
(திருமந்திரம்..2279)

இதுவே உயிரின் மேலான நிலையாகும் என்கிறார் திருமூலர். ஆறுகள் கடலைச் சேருவது போல, தூய்மை பெற்ற உயிரின் அறிவொளி இறைவனின் எல்லையற்ற ஞானப் பிரகாசத்தில் சேர்ந்துகொள்கின்றது.

சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
(திருமந்திரம்...135)

சிவனடியார்கள் ஒப்பற்ற துரிய நிலையில் என்றுமே சஞ்சரிப்பவர்கள். சுயம்பிரகாச வெளியில் இருப்பதாகவும்கூறிக்கொள்வார்கள். ''இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே'' என்றார் திருமூலர். மிக்க பணிவோடு மணிவாசகப் பெருமான் ''தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி'' என்கிறார். அத்தகையோர் நெஞ்சம் எப்போதும், எப்பணியிலும் சிவப் பரம்பொருளின் திருவடியிலேயே தஞ்சமாகக் கிடக்கும். அகத்தேயும் புறத்தேயும் சிவதன்மையின் அடிப்படையில் பொருள்களைக் காண்கின்றார்கள். விஷயங்களை அனுபவிக்கின்றார்கள். திருக்குறிப்புத்தொண்ட நாயனாரின் புறத்துப்பணி ஆடைகளை வெளுத்தலாகும். ஆனால், அவர் இப்பணியிலும் இறை பணி முன் நிற்றலைக் காண்கிறார். மூர்த்தி நாயனார் சிந்தையில் சிவமே நிரம்பி இருந்த காரணத்தால், சந்தனத் திருத்தொண்டுக்கு முழங்

எதற்காக நீ வந்தாய்?
அதை நீ மறக்கலாமா?

வந்த வரவை மறந்து—மிக்க
மாதர் பொன் பூமி மயக்கினில் ஆழும்
இந்த மயக்கை அறுக்க — எனக்
கெந்தைமெய்ஞ்ஞானஎழில்வாள்கொடுத்தான்.

—தாயுமான சுவாமிகள்.

கையைத் தேய்த்தார். எல்லாவற்றிற்கும் மேலாக கண்ணப்பனார் அன்புருவானார். மணிவாசகப் பெருமான் இவருடைய பக்தி வெள்ளத்தின் ஆழத்தைக் கண்டு, கண்ணப்ப நாயனார்போல தனக்கு அன்புஇல்லையேஎனக் கூறி ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்....என்னையும் ஆட்கொண்டருளி'' என இறைவன் மீது தான் வைக்க வேண்டிய அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றார்.

இறை அனுபூதிமான்களுடைய புலன்கள் அவர்கள் வசம் சேர்ந்து, அவர்களால் கட்டுண்டு, அவர்களுடைய இறை உணர்வுக்கு சான்றாகவும், அந்த உணர்வினை வெளிப்படுத்தும் சாதனங்களாகவும் பயன்படுகின்றன. இல்லாவிட்டால் சேக்கிழார் பெருமானுக்கு காவிரி பாயும் சோழர் நாட்டில், நெல் வயல்களில் கதிர்கள் முதிர்ந்து நின்ற தோற்றம் அன்பின் வசப்பட்ட இறையடியார்கள் ஒருவருக்கொருவர் தலைவணங்கி இறைஞ்சுவது போல தோன்றாது. சேக்கிழார் பெருமானுடைய கண்ணோக்கு இறை அருளிலே ஆழ்ந்து கிடக்கும் கண்ணோக்கு.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவம்பலத்தின் அருகே மதிலைச் சூழ்ந்துள்ள ஆழ்ந்த அகழியில் உள்ள தாமரை மலர்களில் வண்டுகள்மகரந்தத் தூள்களிலே படுத்து, அந்தத் தூள் படிந்த மேனி உடையவைகளாகி இருப்பதைத் திருநீறு பூசிய சிவனடியார்களைப் போன்ற தோற்றமாக கண்டார் என்றால் அது வன்தொண்டருடைய சிறந்த சிவப்பண்பினை மட்டும் காட்டவில்லை., அந்தக் காட்சியை நமக்கு அருளித் தந்த சேக்கிழார் பெருமானின் தெய்வத் தன்மையையும் சுட்டிக் காட்டுகிறது.

அத்தகைய பெருமை பெற்ற சிவப்பரம் பொருளில் தம்மை அர்ப்பணித்து சிவயோகத்தில், சிவபோகத்தில் திளைத்து நிற்கின்ற தூங்கிக்கண்டார் பெருமையை எவ்வாறு சொல்வது!

—(தொடர்ந்து வரும்)

தெய்வத் தமிழகத்தில்



ஷண்மத வழிபாடு

சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ்., ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை.

அங்கிங்கென்னாதபடி அனைத்தையும் கடந்தும், அனைத்துள்ளும் சுயம்பிரகாச ஒளியாய் திகழும் பரம்பொருள் அருவ நிலையில் நிர்குணப்பிரஹ்மம் எனவும் உருவத்துடன் தோற்றமளிக்கும் போது குணப்ரஹ்மமெனவும் போற்றப்படும். பல்வேறு ஆன்மீக நிலையிலுள்ள ஜீவன்களுக்கு உருவ வழிபாட்டின் மூலம் மனத்தையும், அறிவையும் ஒருமுகப்படுத்தி தியானத்தின் மூலம் இறைநிலை-இறை உணர்வு அடைய எளிதாகும் என நம் முன்னோர் உணர்ந்தனர். வேதங்களும் ஆகமங்களும் சில்ப சாத்திரமும் பல தெய்வ வடிவங்களைக் குறிப்பிடுகின்றன. எனினும், ஒரு கால கட்டத்தில் அவை ஆறுமூர்த்திகளாக, சிவம், சக்தி, விஷ்ணு, கணபதி, முருகன், ஆதவன் என்ற முக்கிய மூர்த்திகளாக வடிவெடுத்து, அவற்றின் வழிபாடு சைவம், சாக்தம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என நம் சமயத்தின் உறுதியான ஆறு தூண்களாக பல நூற்றாண்டுகளாக விளங்குகின்றன. பாரத தேசத்தில் பல்வேறு பகுதிகளிலும் சைவம், சாக்தம், வைணவம் பரவியுள்ளன. மஹாராஷ்ட்ர மாநிலத்தில் காணாபத்யம் ஆழமாக வேரூன்றியுள்ளது. காளி, துர்க்கை போன்ற வடிவில் வங்கத்தில் சக்தி வழிபாடு உள்ளது.

''ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும்
கணநாதம் மஹேஸ்வரம்
பஞ்சதேவான் ஸ்மரேந் நித்யம்
மஹாபாதக நாசனம்''

என்ற சுலோகத்தின் அடிப்படையில் பல மாநிலங்களில் தினசரி பூஜையில் சூரியன், அம்பிகை, திருமால், விநாயகர், சிவபெருமான் என பஞ்சாய்தன வழிபாடு வழக்கத்தில் உள்ளது. எனினும் தெய்வத் தமிழகத்தில் மட்டுமே ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் இந்த ஆறு வடிவங்களுக்கு முறையாக சிறப்பாக வழிபாடு உள்ளது என்றால் அது மிகையாகாது.

சௌரம்

அருள்மிகு சூரியபகவான், சூரியனார் கோவில்

சூரிய மண்டலத்திற்கு ஒளி, வெப்பம் தந்து பூமியில் கணக்கற்ற ஜீவராசிகளின் வாழ்விற்கு ஆதாரமாக உள்ள சூரியனைத் தெய்வமாக நாகரிகம் தோன்றும் முன்னரே வழிபட ஆரம்பித்தனர்.

''அஸாவதித்யோ ப்ரஹ்ம,
ப்ரஹ்மை வாஹமஸ்மி''

என்ற மந்திரத்தின்படி ஆதவனே ப்ரத்தியட்ச கடவுள் என்று போற்றப்படுகிறார். வேத மந்திரங்களில் முக்கியமான காயத்ரி மந்திரத்திற்கு தேவதையாக சவிதா திகழ்கிறார். சூரியனை பிரதானமாகக் கொண்டு ஏனைய கிரகங்களுடன் பிரதிஷ்டை செய்திருப்பதை சூரியனார் கோயிலில் காணலாம். ஆலயங்களில் காணப்படும் நவக்கிரக பரிவார தேவதைகள் காலத்தில் பிற்பட்டவையெனினும் கிரகங்கள் நம் வாழ்வில் பின்னிப் பிணைந்தவை என்பதால் எந்தக் கர்மாவைச் செய்தாலும், கிரக பிரீதி செய்வதுண்டு, திங்களூரில் சந்திரனுக்கும் வைத்தீஸ்வரன் கோவிலில் செவ்வாய்க்கும், திருவெண்காட்டில் புதனுக்கும், திருத்தேவூரில் வியாழனுக்கும், வெள்ளீசுவரர் கோவிலில் சுக்கிரனுக்கும், திருநள்ளார் போன்ற இடங்களில் சனி பகவானுக்கும் திருநாகேஸ்வரத்தில் ராகுவிற்கும் தனி சந்நிதிகள் உள்ளன.

காணாபத்யம்

அருள்மிகு கற்பக விநாயகர், பிள்ளையார்பட்டி

பிள்ளையாருக்கு கோயில் இல்லாத ஊரே தமிழ் நாட்டில் இல்லை என்று கூறலாம். எல்லா காரியங்களும் தடையின்றி நடைபெறுவதற்கு இவரை வணங்குவதால் விக்னேஸ்வரர் எனப்படுகிறார். பலவகைப்பட்ட சிவகணங்களுக்கு அதிபர்களாக இருப்பவர்களுக்கும் முதன்மையானவர். முதலில் வணங்கத்தக்கவர். யானை முகத்தில் கவிழ்ந்த முக்கோணமும் தும்பிக்கையும் முறையே குண்டலினி யோகத்தில மூலாதார சக்தியும் ஓங்காரமும் ஆகும். இதுவே கடீணச தத்துவமாகும்.

பல புராணங்கள் இவர் 4444 ரூபங்கள் கொண்டவர் எனக் கூறினாலும் வழக்கத்தில் 16 வடிவங்களும், 32 வடிவங்களும் உள்ளன. திருவலஞ்சுழியில் வலம்புரி விநாயகர், திருச்சியில் உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் முக்குறுணிப் பிள்ளையார், திருசெங்காட்டங்குடியில் வாதாபி கணபதி போன்று பல்வேறு இடங்களில் விநாயகர் விசேடமாக எழுந்தருளியுள்ளார்.

கௌமாரம்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி, பழனி

குமரக் கடவுளை வழிபாடு செய்யும் முறையே கௌமாரம் என வழங்கப்படுகிறது. முருகு என்ற பதம் தொன்மை என்றும், அழகு எனவும் பொருள்படும். திருமுருகனின அறுபடைவீடுகள் தவிர நூற்றுக் கணக்கான கோயில்கள் தமிழகம் எங்கும் ஒளிவிடும்காரணத்தினால் முருகப் பெருமானை தமிழகத்தின் சிறப்புக் கடவுள் எனக் கூறினால மிகையாகாது. ஆதிசங்கரர் அருளிய சுப்பிரமணிய புஜங்கம், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், நக்கீரரின் திருமுருகாற்றுப்படை, பாம்பன் சுவாமிகளின் குமாரஸ்தவம் போன்றவை முருக வழிபாட்டிற்கு உகந்தவை யாகும். தந்தைக்கு உபதேசம் செய்யும் சுவாமிநாதன் என்ற வடிவம் சைவத்தில் சிஷ்ய பாவமூர்த்தி எனச் சொல்லப்படுகிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம், சஷ்டி முதலிய நாட்களில் முருக வழிபாடு தமிழகத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் காவடிகளுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சைவம்

அருள்மிகு மகாலிங்க சுவாமி, திருவிடைமருதூர்

வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போகாந்தம், யோகாந்தம், கலாந்தம் என்று ஆறு அந்தங்களின் விழுப்பொருளான சிவபெருமானின் 64 மூர்த்திகளில், முதன்மையானதும் உருவருவானதுமான லிங்கவடிவில் பிரதிஷ்டை செய்து திருக்கோயில்களில் வணங்கப்படுகிறது. அத்வைதம் ஸத்யம் என்று ஆதிசங்கரருக்கு சிவபெருமான் முழங்கிய திருவிடைமருதூர் பழமை வாய்ந்த திருப்புடை மருதூர்; த்வாதஜ்யோதிர் லிங்கத் தலங்களில் ஒன்றான ராமேசுவரம், 28 ஆகமங்கள் லிங்கங்களாகி விட்ட விருத்தாசலம், மகாமகம் காணும் குடந்தை, திருவிளையாடல்கள் நடந்த மதுரை, பஞ்சபூத சேத்திரங்களில் நான்கான சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்கா, காஞ்சி, தேவர்கள் செருக்கை அடக்கும் அட்ட வீரட்டானம், திருவாரூர் முதலிய ஸப்த விடங்க ஸ்தலங்கள், தஞ்சைப் பெரிய கோயில், மும்முக லிங்கமுள்ள திருவக்கரை, தேவாரப் பதிகம் பெற்ற பாரதத்திலுள்ள 275 தலங்களில் தமிழ்நாட்டில் உள்ள 264 தலங்கள் உட்பட ஆயிரம் ஆயிரம் புனித தலங்கள் தமிழகத்தை எந்நாட்டவர்க்கும் இறைவனுடைய முதல் இருப்பிடமாக ஆக்கிவிட்டன.

அருள்மிகு காமாட்சி அம்மன், காஞ்சிபுரம்

சாக்தம்

அம்மா என்ற குழந்தையின் முதல் குரலுக்கு அருள்பாலிக்கும் அன்னை பராசக்தியின் வழிபாடு 64 தந்திரங்களில் விரிவாகச் சொல்லப்படுகிறது. குமரக் கடவுளுக்கு அடுத்தபடியாக சிறப்பாக தமிழகத்தில் வழிபடப் பெறுவது அம்பிகையைத்தான். கலைமகள், அலைமகள், மலைமகள் என்றும், நவசக்திகளாகவும் ஸ்ரீவித்யையாகவும் அன்னை காட்சியளிக்கிறாள். பாரதத்தில் 51 சக்தி பீடங்கள் உள்ளன. காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, திருவாரூர் கமலை, திருக்கடவூர் அபிராமி, திருவானைக்கா அகிலாண்டேசுவரி, கூத்தனூர் சரஸ்வதி, கன்னியாகுமரி குமரி, சங்கரன் கோயில் கோமதி, குற்றாலம் பராசக்தி ஆகியவை தமிழகத்தில் உள்ளவை. இவை தவிர பல உப பீடங்களும் தமிழ் நாட்டில் உள்ளன. அம்மன் திருக்கோயில்களில் சாரதா நவராத்திரியின் போதும், தை, ஆடி மாதங்களிலும் விசேட வழிபாடு உண்டு.

வைணவம்

அருள்மிகு ஆதிநாத ஆழ்வார், ஆழ்வார் திருநகரி

சைவம், சாக்தம் போன்றே ஆதிகால முதலே வைணவமும், பாரத தேசத்திலும் தமிழ் நாட்டிலும் சிறப்பாக இருந்து வந்துள்ளது. ப்ரபத்தி எனும் சரணாகதி மார்க்கத்தை வைணவம் வலியுறுத்துகிறது. திருமால் தன் அடியார்களுக்கு அருள் புரிவதற்காக ஐந்து நிலைகளில் எழுந்தருளியிருக்கிறார். இவை முறையே பரத்வம், வ்யூகம், அந்தர்யாமித்வம் விபவம், அர்ச்சை என்று கூறப்படும். இவற்றில் இறுதியாக கூறப்பட்ட அர்ச்சை என்பது பற்பல திருத்தலங்களில் விக்ரஹமாய் எழுந்தருளி இருக்கும் நிலைகள் ஆகும். வைணவத்தில் போற்றப்படும் 108 திவ்ய தேசங்களில் ஸ்ரீரங்கம் உட்பட 84 சேத்திரங்கள் தமிழகத்தில் உள்ளன. திருக்கோஷ்டியூரில் ஸ்ரீராமானுஜாசாரியார், அஷ்டாட்சரி ஆகிய நாராயண மந்திரத்தை அஷ்டாங்க விமானத்தின் மீது ஏறி மக்களுக்கு ஓதியதும் இத்தமிழகத்தில்தான். வைணவத்தில் உள்ள பாஞ்சராத்ரம், வைகானசம் ஆகிய ஆகம முறைப்படி தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பூஜைகள் நடந்து வருகின்றன.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ!

கம்பன் கவிநயமணி

வே. தியாகராஜன்

(16)

மதுரையைக் குலோத்துங்க பாண்டியன் அரசாட்சி செய்து வந்தான். அக்காலத்தில் அவந்தி என்னும் ஊரில் பிறந்து வளர்ந்த ஒரு பிராமணன் காமம் கொண்டு அச்செருக்கினால் தன்னை வயிற்றிடை விளைவித்து ஈன்றவள் தன்னை விரும்பினான். அந்த பாவியின் அன்னையும் பெண்மைக்கான நாணம் (தன் கணவனைத் தவிரப் பிறரைக் காண வெட்க முறுதல்) மடம் (தனது கணவரது குணத்தையன்றி வேறொருவரின் குணத்தையறியாமை) அச்சம் (தனித்திருத்தல் முதலானவற்றிற்கு அஞ்சுதல்) பயிர்ப்பு (பயிலாத பொருள்களின் மீது வெறுப்புக் கொள்ளுதல்) முதலான குணங்களை விட்டு மாடாவியான மகனது வழியே நடந்தாள். பெற்ற தந்தை இதைக் கண்டிக்க, மகன் தந்தையைக் கொன்றான். தந்தைக்கு ஊர் மெச்சும் வண்ணம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு, வீட்டில் உள்ள செலவங்களை அள்ளிக் கொண்டு பெற்ற தாயுடன் வேறிடத்திலிருந்து வாழலாம் என்று எண்ணிச் சென்ற போது வழியில் கொள்ளைக்காரர்கள் வந்து பொருள்களையெல்லாம் பிடுங்கிக் கொண்டு அவனது அன்னையையும் சிறையெடுத்துச் சென்றனர். தான் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது என்ற வார்த்தை இவன் விஷயத்தில் பலித்துவிட்டது.

''சென்று சேணிடைச் சிக்கற வாழலாம்
என்ற எண்ணமொன்று யெய்திய வண்ண
மொன்று
ஒன்று நாமெண்ணத்தெய்வமொன்
றெண்ணியது
என்ற வார்த்தை இவனிடைப்பட்டதால்''.

பெற்ற தாயைப் பிரிந்த மகன் துணையிழந்து விட்டான். நாமாவது இவனுக்குத் துணையாகலாம் என்று கொலை செய்யப்பட்ட தந்தை பிரமஹத்தி உருக்கொண்டு மகனைப்பற்றினான் இதனால் ''ஆஹா'' என்றும், அழுதும், ''சிவனே'' என அலறியும் நிழலைப் பார்த்துக் கோபித்தும் அலைந்தான். புனித தீர்த்தம், சிவத்தலம், நல்லவர் பக்கம் சேரவிடாமல், சிவ நாமம் காதில் நுழையவிடாமல், மனதில் நினைக்கவோ, வாயால் சொல்லவோ விடாது எனப் பிரமகத்தியின் கொடுமையைக் கூறுகிறார் பரஞ்சோதி.

''நல்ல தீர்த்தம், சிவதலம் நல்லோர் பக்கமும்
செல்லவொட்டாது;அரன்சீர்த்தி நாமம்செவிப்
புல்லவொட்டாது உளம் புகுதவொட்டாது
நாமம்
சொல்லவொட்டாது கண்துயில வொட்டா
தரோ''.

இவ்வாறு அலைப்புண்ட மாபாதகன் கடைசியில் மதுரையை வந்து அடைந்த காலத்து மதுரைக் கோயில் வாசலில் வேடனாகவும் வேடச்சியாகவும் உருக்கொண்டு சூதாடிக் கொண்டிருந்த சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சி அம்மையையும் கண்டான். வேழமுண்ட விளங்கனி போல (வேழமென்பது விளாங்கனிக்கு உண்டாகும் ஒரு நோய்) அந்த வியாதி பிடித்த விளாம்பழத்தை உடைத்தால் ஓட்டினுள் ஒன்றுமே இராது. இதன் பொருளை அறியாத சிலர் விளாம்பழத்தை யானை தின்ற பின் இடுலத்தியில் விளாம்பழம் முழு உருவுடன் வெளிப்படும், உள்ளே ஒன்றுமே இருக்காது என்பர். அதேபோல் இளநீருக்குத் தேரை என்ற ஒரு நோயுண்டு. அந்த நோய் பிடித்த இளநீர்க்காயில் இளநீரே இராது. அறியாதவர் தேரை (தவளையினம்) தண்ணீரைக் குடித்துவிட்டது என்பர். ''தேரையர் செவ்விளநீருண்ணார்'' என ஒரு பாடல்கூட உண்டு. தன்னை நோக்கி வரும் அந்த அந்தணனைக் கண்ட இறைவன் ''எவரும் மனத்தினாலும் நினைக்கவொண்ணாத பாவங்களைச் செய்தவன் வருகிறான் பார்'' காமம் மனிதனைக் கெடுத்துவிடும்'' என்றார்.

''காமமே கொலைகட்கெல்லாம் காரணம்
கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாம் காரணம் கூற்றும்
அஞ்சும்
காமமே கள்ளுண்டர்க்கும் காரணம் ஆதலாலே
காமமே நரகபூமி காணியாக் கொடுப்பதென்
றான்.''

இறைவனை தரிசித்த புண்ணியத்தால் அறிவு பெற்ற அந்தணன் தந்தைக்குத் துரோகமிழைத்துஅவரைக் கொன்றதையும், தனக்குப் பிரம்மகத்தி தோஷம் பிடித்ததையும் கூறி வருந்தினான். அவனைக் கண்டு இரக்கம் கொண்ட இறைவன் ''உன் பெயரை வாயால் சொன்னவரின் இனமே நரகத்திற்குப் போய் விடும். உன் பாவமும் இந்தத் தலம் தவிர எங்குமே நீங்காது. விடியற்காலை எழுந்து அறுகம் புல் கொய்து பசுக்களுக்கு அளித்து, மதுரை சிவபெருமானுக்கு அபிடேகம் செய்ய பெற்ற கங்கையைக் காட்டிலும் புனிதமான நீரில் மும்முறை நீராடி, இந்த ஆலயத்தை நூற்றெட்டு



முறை உடல் தரையில் பட உருண்டு அங்கப்ரதட்சணம் செய்வாயாக'' எனக் கூறினார். பக்கத்திலிருந்த மீனாட்சியம்மை அது கேட்டு ''ஐயனே! இவன் செய்துள்ள பாவங்களுக்கு எத்தனைக் காலம் நரகத்திலிருந்து தண்டனை அடைந்தாலும் போதாதே! இவனுக்குக்கூடப் பரிகாரம் உண்டா?'' என்றனள். 'பழி பாவத்திற்கு அஞ்சாதவரானாலும், தனது பாவங்களின் கொடுமையை அறிந்து, தன் குற்றத்தை உணர்ந்து தவித்து, பாவநீக்கம பெற்றுப் புனிதமடைய வேணுமென விரும்புவரைக் காப்பது உண்மையான கருணை'' எனக் கூறினார் பெருமான். ''இது தங்களின அருள் விளையாட்டு'', என அம்மை கூற இருவரும் மறைந்தருளினர். பிராமணன் இறைவன் கூறியவாறே செய்து நற்கதி பெற்றான். நினைக்கவே முடியாத பாவங்களைச் செய்தவனின் பாவங்களைப் போக்கியது இறைவனது புனித நீர் என்றால் குட்டம் முதலான கொடிய நோய்களைப் போக்குவது மிகச் சாதாரணமாக பெருமையன்றோ.?

''அன்னையைப் புணர்ந்து, தாதை குரவனாம்
அந்தணாளன்
தன்னையும் கொன்ற பாவம் தணித்து வீட
ளித்தது என்றால்
பின்னைநீர் இழிநோய்குட்டம் பெருவயிறு
ஈளைவெப்பு என்று
இன்னநோய் தீர்க்கும் தீர்த்தம் என்பதோ
இதற்கு மேன்மை.''

இந்தத் திருவிளையாடலின் கருத்தை மகாவித்துவான் பிள்ளையவர்கள் ஒரு பாடலில் கையாளுகிறார் ''அம்மையே! என்னை மாபாவி என்று எண்ணி என் எதிரில் வருவது தகாது என எண்ணுகிறாயா? மதுரையிலிருந்து மகாபாவிக்கும் நன்மை செய்து உய்வித்த இறைவனின் மனைவியன்றோ நீ! எனவே இப்பாவியையும் காத்தருள் என்கிறார்.

''பாவிநீ நின்முன் வருவது தகாதென் பரிசினிக்
கென்பையேல் முன்னம்
ஆவிசூழ் மதுரை அகத்து மாபாவி ஆயினான்
ஒருவன் முன்முக்கட்
கோவினோடடைந்த குணத்தி நீயலையோ?
குலவதுமறந்தனைகொல்லோ
காவியங்கழனி சூழ்திருவானைக்கா அகிலாண்ட
நாயகியே''.

திருவிளையாடற் புராணச் செயதிகளில் ஈடுபடாத புலவரே கிடையாது. மீனாட்சி சுந்தரர் துணை.
(தொடரும்)

— — —

கீதைக்குறள்கள்

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

4. ஞானம் கர்மம் சங்யாச விளக்கம்

(ஞான கர்ம சங்யாச யோகம்)

இவ்யோகம் ஆதியில் என்னால் வழங்கியே
இவ்வுலகில் தோன்றின தாம். (4-1)

வழிவழியாய் வந்ததிதை மாமுனிவோர்காத்தும்
அழிந்தன காலப்போக்கில். (4-2)

என்பக்த னென்றே உனக்குநான் கூறுவேன்இத்
தொன்மை மறையினை இன்று. (4-3)

உன்பிறப்பிற்கு முன்னரே வாழ்ந்த மாமுனிவ
ருக்கு
நீ எவ்வாறு ஆதியில் கூறியிருக்க முடியும்?
என்று ஓர்
ஐயப்பாட்டை விளக்க வேண்டினான் அருச்
சுனன்(4-4)

எண்ணில் பிறவிகள் உண்டெனக்கு என்பதைத்
திண்ணமாய் நீயறிந்து கொள். (4-5)

ஈறும் பிறப்புமற்ற ஈடில் தலைவனெனின்
வேறுமாயை யால்பிறப்பேன். (4-6)

எப்பொழு தெல்லாம் தருமம் அழியுமோ
அப்பொழுதெல் லாம்பிறப்பேன் நான் (4-7)

யுகந்தோறும் தோன்றி உயர்தருமம் காப்பேன்
அகந்தைதீயும் நன்மை வளரும். (4-8)

இவ்வுண்மை தேர்ந்தோர் பிறவார் இப்புவியில்
அவ்வுலகில் என்னடிசேர் வர். (4-9)

போற்றிச் சரணடைந்தோர் யாவரையும்
போற்றுவேன்
சீற்ற(ம்)அச்சம், பற்றுமின்றி வாழ். (4-10)

எவ்வழியில் யாரொருவர் யாரை வழிபடினும்
அவ்வழியில் நின்றருள்வேன் நான். (4-11)

வேள்வியாற்றித் தேவரிடம் வேண்டியன கேட்
டிடுதல
நாள்வினை செய்திடுவோர் பண்பு. (4-12)

வருண தருமம் வகுத்தேன், குணமும்
ஒருவனின் செய்வினையும் கொண்டு. 4-13

நான்காய் வருணம் வகுத்தபோதே நானெனினும்
நான்செயலும் ஈறுமற்ற வன். (4-13)

கன்மமும் சாரா, கருதேன் பயனையும்யான்
என்னைக் கட்டிடா தேதும். (4-14)

முத்திபெற்ற மாமுனியும் விட்டிலர் கர்மத்தை
அத்திறம்நீ யும்செய் தொழில். (4-15)

கன்மந்தான் யாது? கருமமல்ல லாததெது?
என்பதை நீயறிக நன்று. (4-16)

கன்மத்தின் தன்மையுடன் வேண்டாத கன்மத்
-தின்
புன்மையும் கண்டறிதல் நன்று. (4-17)

கருமத்தில் இன்மையும் உண்மையும் காண்
போனே
பெருமித யோகியா வான். (4-18)

செய்கையில் ஆசையும் சேர்பயனும் நோக்கா
தான்
மெய்யுணர் மாமுனி யாம். (4-19)

தோன்றும் தொழிலில் தொழிலின்மை,
பற்றிலா
ஆன்றமனத் தின்நிறை வால். (4-20)

உடைமையில் பற்றின்றி உன்மனத்தை வென்று
கடமையாற் றின்பாவம் இல். (4-21)

வேண்டுதல் வேண்டாமை யில்லா மனநிறை
வால்
யாண்டும் வினைசெயல் நன்று. (4-22)

மற்றும் மனத்தளர்ச்சி யும்பொறாமையும்
முற்றும்
அற்றவினை கள்தளையா காது. (4-22)

பற்றற்றுப் பந்தமில்லா நல்லறிஞன்செய்கருமம்
என்றைக்கும் நல்வேள்வியாம். (4-23)

பிர்மவேள்வி யில்யாவும் பிர்மமெனக் கொள்
பவர்
பிர்மநிலை பெற்றிடுவர் காண். (4-24)

ஆன்மாவைப் பிர்மத்தில் ஆகுதிசெய் வர்சிலர்
வான்தேவரைப் போற்றுவோரும் உண்டு(4-25)

பொறிகளை வென்றடக்கிப் போற்றுதலோர்
வேள்வி
பொறியுணர்வு அர்ப்பணம்மற் றொன்று.(4-26)

மெய்யறிவு வேள்வியாம் யோகத்தில் அர்ப்ப
ணிப்பர்
ஐம்புலனின் கூத்தைச் சிலர். (4-27)

செய்தவத்தை யோகத்தைச் செல்வத்தைப்
போதத்தைச்
செய்வர் சிலரர்ப்பணம். (4-28)

பிராண அபாணமாம் மூச்சைப் பிடித்துப்
பிராணாயா மம்செய்வார் உண்டு. (4-29)

உணவை ஒழுங்குசெய்து உண்பதே வேள்வி
யெனக்கொண் டிருப்பர் சிலர். (4-30)

(தொடரும்)

ஸ்ரீ வாமனாவதாரம்

'' சமயச் சொற்பொழிவாளர் ''
ஜயஸ்ரீ மூகாம்பிகா

எம்பெருமானின் ஐந்தாவது திருவவதாரம் ஸ்ரீவாமனாவதாரம். மகரிஷி மைந்தராக மாணிடத்திருமேனி எடுத்து தேவருக்கு வாழ்வளித்து அசுரனுக்கும் அருள்வழங்கிய அற்புத அவதாரம். இந்த அவதாரத்தைப்பற்றி இதிகாசங்களான ஸ்ரீ ராமாயணமும் மகாபாரதமும் கூறுகின்றன. பத்மபுராணம், ஸ்காந்தபுராணம், விஷ்ணுபுராணம், வாமனபுராணம் முதலிய புராணங்களும் ஸ்ரீமத்பாகவதமும் விவரிக்கின்றன. பிரகலாதனுக்காக நரசிம்மமாக வெளிப்பட்டவர், அவர் பேரனான பலியிடத்தில் வாமனராக நடந்துவந்தார்.

அமரர்களும், அசுரர்களும் கூடிப் பாற்கடலைக் கடைந்தனர். அமிர்தம் கிடைத்தது. திருமால் மோகினியாக அவதாரம் செய்து அசுரர்களை மயக்கி, அமரருக்கே அமிர்தத்தைக் கொடுத்து மறைந்தார். அதன் பிறகு தேவாசுரயுத்தம் நடந்தது. அசுரவேந்தனாகிய மகாபலி போரில் அடிபட்டுவீழ்ந்தான். குற்றுயிராய்க் கிடந்தவனை மற்ற அசுரர்கள் தம் மூலகுக்குக் கொண்டு சென்றார்கள். பிறகு குலத்தில் தோன்றிய சுக்கிராச்சாரியாரும், மற்ற முனிவர்களும் பலிக்கு மீண்டும பலமும் தேஜசும் உண்டாகச் செய்தார்கள். மற்ற அசுரர்களும் பலம் பெற்றார்கள். பலி தேவேந்திரரை வென்று இந்திரலோக ஆட்சியைப் பெற விரும்பினான். அதற்காக பிருகு குல முனிவர்கள் சுக்கிராச்சாரியாரை முன்னிட்டு 'விஸ்வஜித்' என்னும் மிகப் பெரிய வேள்வியைச் செய்தார்கள். யாகாக்னியிலிருந்து தங்க ரதம் தோன்றியது. அதில் சிம்மக்கொடி பறந்தது. பச்சை நிறக் குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன. தங்கமயமான வில்லும், இரண்டு அம்புக் கூடுகளும், கவசமும் இருந்தன. இவற்றையெல்லாம்வேதியர்கள் மகாபலிக்கு வழங்கினர். பிதாமகரான பிரகலாதன் வாடாத தாமரை மலர் மாலையைத் தந்தார். குருவான சுக்ரர் சங்கு ஒன்றைக் கொடுத்தார். மகாபலி பிரகலாதரையும், சுக்கிராச்சாரியாரையும் வலம் வந்து வணங்கினான். அவர்கள் ஆசிகளைப் பெற்று இரதத்தில் ஏறினான். படை எடுத்துச் சென்று மகேந்திரபுரியை முற்றுகையிட்டான். அசுரன் படையெடுப்பைக் கண்டு அமரேந்திரன் அலமந்தான். தேவகுரு பிரகஸ்பதிய, 'தேவேந்திரா'! மகாபலி ஆச்சார்ய அருளைப் பெற்றிருக்கிறான். அவன் காலம் பொற்காலமாக இருக்கிறது. இப்போது அவனை எதிர்த்தால் வெல்லவியலாது. நீங்கள் உங்களுக்கு நற்காலம் பிறக்கும்வரை மறைந்துறைவதே நல்லது' என்றுரைத்தார். குருவாக்கை ஏற்று தேவர்கள் மாறுவேடம் பூண்டு மறைந்து போனார்கள். மகாபலியும் இந்திரனுடைய சிம்மாசனத்தில் அமர்ந்தான். மூவுலகையும் தன் வசப்படுத்திக் கொண்டு தன்னிகரில்லா தவனாகத் திகழ்ந்தான். இவ்வாறு பல வருடங்கள் கடந்தன. இந்த ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக சுக்ரர் முதலானோர் நூறு அசுவமேதயாகங்களைச் செய்யத் தொடங்கினர். (நூறு அசுவமேதயாகங்களைப் பூர்த்தியாக நடத்தியவனே முறைப்படி தேவேந்திரனாக அமரத்தக்கவன்) நர்மதை நதிக்கரையில் சோணித புரத்தில் வேள்விச்சாலை அமைக்கப்பட்டு, வேள்வி முறையாக நடைபெறுகிறது. மகாபலி யாக தீக்கை பெற்றான். மகாதானங்களைச் செய்த வண்ணம் இருந்தான். எவர் எது வேண்டினும் அதை அதனினும் மேலாக வழங்கினான்.

தேவர்களுடைய தாய் அதிதிதேவி தன் பிள்ளைகள் நிலைமைக்காக மிகவும் வருந்தினாள். தவம் முடிந்து ஆசிரமத்திற்கு வந்தார் தந்தை கசியபர். மனைவியின் வருத்தத்திற்குக் காரணம் கேட்டறிந்தார். தங்கள் உலகை இழந்து தேவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று கூட தெரியவில்லை என வருந்திய அதிதிக்கு ஆறுதல் கூறினார். ''அனைத்தும் ஆண்டவன் மாயை. அனால் புத்திர பாசத்தின் வசப்பட்டு வருந்தும் நீ இப்போது இதை உணர மாட்டாய். சரி, உன் வருத்தம் நீங்கும் வழி கூறுகிறேன் கேள். பயோவிரதத்தை நீ அனுஷ்டிப்பாயாக. உனக்கு ஒரு நன்மகன் பிறப்பான். மகாபலியை அடக்குவான். இந்திரனுக்கு செல்வத்தையும், மூவுலக ஆதிபத்தியத்தையும் கொடுப்பான், என்று கூறி அவ்விரதத்தை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் விளக்கினார்

அதிதிதேவியும பன்னிரண்டு நாட்கள் அவ்விரதத்தை முறையாகச் செய்தாள். திருமால் திவ்யத் திருக்கோலத்தோடு தரிசனமளித்தார். 'தேவமாதவே' துவாதசியில் எனக்குஆராதனம் செய். தத்தியோதனம் நிவேதனம் செய். உனக்கு நானே மகனாகப் பிறக்கிறேன். இந்திரனுக்கு ஆட்சியைக் கொடுக்கிறேன்'' என்று கூறி மறைந்தார். புரட்டாசி மாதத்தில் வளர்பிறை துவாதசியில், திருவோண நட்சத்திரத்தில் குழந்தையாக திருவதாரம் செய்தார். குள்ளமாகவும் அழகாகவும் இருந்தார். அவருக்கு ஸ்ரீவாமனன் என்று நாமஞ்சூட்டினர். ஐந்து வயதுச்சிறுவனாகத் தோன்றினார். வாமனருக்கு உபநயனச்சடங்கு செய்தார்கள். சூரிய தேவர் காயத்ரி மந்திரத்தை உபதேசித்தார். தேவகுரு பூணூல் அணிவித்தார். பூமி மான் தோலையும், சிவபிரான் தண்டத்தையும், ஆகாயம் குடையையும், குபேரன் பிட்சாபாத்திரத்தையும் கொடுத்தார்கள். பார்வதி பிட்சையிட்டாள். தேவர்கள் ஸ்ரீவாமனரை வணங்கினார்கள். மகாபலியின் வேள்வி குறித்தும், தானங்

களைப் பற்றியும் கூறினார்கள். முனிவர் சூழ வாமனர் மகாபலியின் யாகசாலைக்குப் புறப்பட்டார்.

யாகசாலைக்கு வாமனர் எழுந்தருளினார். **அவரின் அழகையும் ஒளியைப் பார்த்தவர் சூரிய தேவனே மானிட வடிவேற்று வந்தாரா, அன்றி அக்னிதான் இப்படி வந்திருக்கிறாரா என்றுஒருவரை ஒருவர் வினவிக் கொண்டனர்.**

சுக்ரரும் மற்றுமுள்ள முனிவர்களும் எழுந்துநின்று கரம்கூப்பினார்கள். பலிச்சக்கரவர்த்தி வரவேற்று ஆசனம் கொடுத்தான். நலன் விசாரித்தான். வணங்கினான். ஸ்ரீவாமனரது திருப்பாதங்களைத் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து அத்தீர்த்தத்தை தன் சிரசில் பக்தியோடு தெளித்துக் கொண்டான். 'ஸ்வாமி! தங்கள் திருப்பாதம் இங்கு பட்டது என் பாக்கியம். நான் செய்த புண்ணியத்தாலும் என் முன்னோர் செய்த புண்ணியத்தாலும தாங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். ஐயனே! தாங்கள் வேண்டுவது யாது?'' என்று வினயமாகக் கேட்டான்.

''மன்னவா! பிரகலாதன் பேரனல்லவா நீர்! அதற்குத் தக்க வார்த்தைகளையே கூறினீர். நான் விரும்பும் பொருளைத் தருவீராக. என் பாதத்தால் மூன்றடி நிலத்தை எனக்குத் தானஞ் செய்!''

மகாபலி சிரித்தான். ''அந்தணச் சிறுவரே தங்கள் உருவமே, மிகச் சிறியது. இச்சிறு பாதத்தால் 3 அடி வைத்து அளந்தால் என்ன பொருள் கிடைக்கும்? அதைக் கொடுத்த எனக்குப் பெருமையும் புகழும் ஏற்படாது. மிக அற்பமான பொருளைக் கேட்டுப் பெற்று, என் பெருமையைக் குறைக்க வேண்டாம். என்னிடம் தானம் வாங்கியவன் வேறு ஒருவரிடத்தும் வாங்குவதில்லை. நிறையப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்'' என்றான்.

வாமனரோ தான் கேட்டதைத் தமக் களித்தால் போதும் என்றார்.

சுக்ராச்சாரியார் நாராயணரே வாமனர் என்பதை அறிந்து கொண்டார். திருமகள் கேள்வன் தன் சிஷ்யனுக்கு ஏழ்மையைக் கொடுக்கவே வந்திருக்கிறார் என்ற அவதார ரகசியத்தையும் புரிந்து கொண்டார். அதைத் தடுப்பதற்காக மகாபலியை நெருங்கினார். ''மகாபலி'' இவர் சாட்சாத் எம்பெருமான். தேவேந்திரனுக்கு நன்மை செய்வதற்காகவே இங்கு வந்திருக்கிறார். இப்போது இவர் உன்னிடம் கேட்பது மூவடி மண்ணையல்ல. உன் செல்வம், அதிகாரம், பதவி இவற்றைத்தான்!

''குருதேவா! கேட்ட தானத்தைக் கொடுப்பதாகக் கூறியுள்ளேன்''.

''உண்மை. கொடுக்காவிட்டால் கொடுத்த வாக்கை மீறிய குற்றம் ஏற்படும். ஆனால் கொடுத்தால் நீ பெற்ற வெற்றியும் செல்வமும் இழப்பாய். இந்த விஷயத்தில் வாக்கை மீறினால் பாவமாகாது. உயிருக்கு ஆபத்து நேரிடும்

காலத்திலும், பசுக்களையும், அந்தணர்களையும் காப்பதற்காகவும் பொய் கூறினால அது சற்றும் பாவமாகா என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. எந்த விஷயத்திலும் விதிவிலக்கு உண்டு. ஆகவே இது விஷயத்தில் நான் கூறுவதுபோல் செய். இந்த மாயாவிக்கு-அந்தண வேடம் தாங்கி வந்திருக்கும் ஆண்டவனுக்கு தானம் கொடுத்து உன்னை நீ இழக்காதே!''

குருதேவா! மன்னிக்கவேண்டும். இவர் எம்பெருமான் என்று கூறுகிறீர்கள். தாங்களும் தங்களைப் போன்ற முனிவர்களும் யாகங்களால் இவருக்குத்தான் ஆராதனை செய்கிறீர்கள். அப்படிப்பட்ட மகாவிஷ்ணு என்னிடம் தானம் கேட்டு வந்திருக்கிறார். இது எனக்கு பெரும் பெருமையல்லவா? இவர் கேட்டதைக் கொடுப்பேன். அனைத்தையும் இழந்தாலும் இறவாப் புகழ் பெறுவேன்''

தன் பேச்சை மீறும் மகாபலியிடம் சினம் ஏற்பட்டது சுக்ரருக்கு, ''என் பேச்சை மீறும் நீ ஐசுவர்யம் அனைத்தையும் இழப்பாய்' என்றார்.

மகாபலி மனங்கலங்கவில்லை. தானங் கொடுக்கத் தயாரானான். மனைவி வித்தியாவதி தாரை வார்த்தாள். மனம் பொறுக்காத சுக்கிராச்சாரியார் வண்டுருவாகி, தண்ணீர் கீழே விழும் துவாரத்தைக் அடைத்துக் கொண்டார். வார்த்தால் நீர் இழிந்து வராதது கண்டு, நடந்ததையறிந்து இனிய முறுவலுடன் வாமனர் தர்ப்பை முனையால் துவாரத்தைக் குத்தினார். அது வண்டின் கண்ணில் குத்தியது. சுக்ரர் தம் ஒரு கண்ணை இழந்தார். பின் மூவடி மண்ணைத் தானம் ஏற்றார்.

அப்போது அமரர் விண்ணில் நின்று ஆரவாரம் செய்தனர். அப்சரப் பெண்கள் ஆடினர். பூமழை பொழிந்தது. ஸ்ரீவாமனருடைய திருமேனி வளர்ந்து கொண்டே போனது. ஒரு பாதம் பூவுலகனைத்தையும் அளந்தது. ஒரு பாதம் மேல் நோக்கி வளர்ந்து அண்டத்தைக் கடந்து பிரம்மலோகம் வரை சென்றது. பிரம்மதேவர் பயபக்தியுடன் அந்தத் திருப்பாதத்திற்கு தீர்த்தாபிஷேகம் செய்தார். மற்ற தேவர்களும் எம்பெருமானுடைய திருப்பாதத்திற்கு புஷ்பங்களாலும் தூபதீபங்களாலும் பூஜித்தார்கள்.

பலியின் புத்திரர்களும், மற்றுள்ள அசுரர்களும் திருமால் அந்தண வேடமிட்டுவந்து, அமரரைக்காக்க வேண்டி இங்ஙனம்செய்கிறார். இவரை அடக்குவதே தகும் என்று ஆயுதங்களைத் தாங்கி எதிர்க்க வந்தார்கள். மகாபலி அவர்களைத்தடுத்துநிறுத்தினான். 'பெருமானே ஈரடியே அளந்தேன், மூன்றாவது அடிக்கு இடமில்லையே' என மகாபலி பணிந்து, 'பெருமானே, என் சிரமே தங்களது மூன்றாவது அடிக்கு இடமாகட்டும்' என்றான்.

பெருமான் திருப்பாதம் மாவலி தலையில் அமர்ந்தது. ''மகாபலி! நீ உத்தமன், பூமி பிளந்து உனக்கு வழி உண்டாகும்: கீழே சுதல உலகிற்குச் செல், அங்கேயே வாசம் செய், உன் மாளிகை வாயிலில் நான் நிரந்தரமாக வாசம் செய்வேன். உன்னைக் காப்பேன். உன் பகைவனை என் சக்கரம் அழிக்கும். பின்னாளில் நீ தேவேந்திர பதவியிலும் அமர்வாய்!'' என்றருளினார்.

ஒன்றே குலம்
ஒருவனே தேவன்

கடவுள் நம் அனைவரின் மேலான தந்தை என்று, வழிபடும்போது கூறிவிட்டுப் பிறகு நமது அன்றாட வாழ்க்கையில் மற்றவர்களை, ஒவ்வொரு மனிதனையும் சகோதரனாகக் கருதாமற்போனால், இந்த வழிபாட்டினால் என்ன நன்மை விளைய முடியும்?

—சுவாமி விவேகானந்தர்

பலி ஆனந்தத்தோடு ஸ்ரீ வாமன மூர்த்தியைத் துதித்தான், சுதல உலகம் சென்றான். பெருமான அங்கே தோன்றி வாசம் செய்தார். வேள்வியை பகவானுக்கு அர்ப்பணமாக்கிப் பூர்த்தி செய்தார்கள் முனிவர்கள்.

பெருமான் திருப்பாதந்தைச் சிரமேல் தாங்கிப், பெருமானே தனக்கு ரட்சகராக இருக்கும் பெரும்பேறு பெற்றான். மகாபலி.

'மண்தாவென இரந்து மாவலியை
ஒண்தாரை நீரங்கைதோய நிமிர்த்திலையே
நீள்விசும்பி லாரங்கைதோயவெடுத்து''
— என்று பொய்கையாழ்வார் போற்றுகிறார்.

'மண்ணடுங்கத் தானளந்த திருமாலின் ஒரு திருவடிக்கு பூமியைச் சூழ்ந்த கடலைச் சுற்றியுள்ள சக்கரவாளகிரியானது சிலம்பு போன்று அணி செய்தது என்று அழகாகக் கூறுகிறது திருவரங்கத்துமாலை.

''தேமிக்கபச்சைத்துழாயரங்கேசர் திருக்குறளாய்த்
தாமிப்புவனங் கடந்தவர்கள் மணற்சாகரஞ்சூழ்
பூமிப்புடையளவிட்ட பொற்றாமரைப் பூங்கழற்கு
நேமிச் சிலம்பு திருச்சிலம்பாகிநிலைபெற்றதே''

தோணியப்பர்

—ஞானச்சேரி ஞானிகள்

வேளச்சேரி ஆசிரமம், வேளச்சேரி

வாழ்க்கையில் மனிதன் இருக்கலாம். பொருளுடன் விளக்கினால், ஆண் பெண் இவ்விருவருமே வாழ்க்கையில் இருக்கலாம். வாழ்க்கைக்குள் எவரும் இருக்கக்கூடாது. விசாகப்பட்டினத்திலே கட்டப்பட்ட கப்பல் கடலில் விடப்படுவதற்கே தயாரிக்கப்பட்டது. கட்டப்பட்ட கப்பலின் அடியில் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு தொழிலாளி ஒரு ஓட்டை போட்டு தண்ணீர் உள்ளே செல்லும்படியாக செய்துவிட்டான்.

கப்பல் கடலில் செலுத்தப்பட்டட்டது, என்ன ஆகுமென்று நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். சிறிது சிறிதாக தண்ணீர் கப்பலுக்குள் செல்லும். கப்பல் தண்ணீரில் அமிழும். அதிலேயே கிடக்கும்.

இது போலவே மனிதன் வாழ்க்கைக்குள் இருப்பது. வாழ்க்கை என்ற தத்துவம் மனித மனதினுள் சென்றால் பிரச்சினை தான் தெரியும். வாழ்க்கைக்குள் அமிழ்ந்து விடுவோம். பிறகு இறைவனை நினைப்பது எப்படி? பிரச்சினைக்குள் இருந்து கொண்டு இறைவனை நினைத்தாலும் நமது நினைவும் பூஜையும் அரைகுறையானதே. அல்லது போலியானதே. இதனால் மனிதன் இறைவனை நினைக்க ஓட்டைக் கப்பலை போல் இருந்தால் துன்பப்படுவான்.

கடலின் மீது கப்பல் மிதப்பதைப்போன்று வாழ்க்கையில் இரு. எதிலும் மூழ்காமல் அமிழாமல் குடும்பம் நடத்தலாம்; விருப்பம் இருந்தால் இறைவனை நினைக்கலாம். பக்தி வந்துவிடும். சம்சாரம் ஒரு கடல்; வாழ்க்கை ஒரு கடல். இதில் நீந்து என்று இறைவன் சொல்லுவதில்லை. தோணியில் மிதந்து வா. அல்லது வாழ்க்கைக் கடலில் பயணம் செய்து சென்று வா, வென்று வா என்றே சொல்லுகிறான். சிவபெருமான் தோணியில் அமர்ந்து மிதந்து வந்தார்; காட்சி தந்தார். இதைப் புராணமாகப் படித்து மனிதன் வீணாகிவிடக் கூடாது என்பதே எளியவனின் எண்ணம்.

சிவபெருமான் வந்த தோணியை உடம்பாகவும், வாழ்க்கையைக் கடலாகவும் எண்ணி இருந்தால் இந்நேரம் சமுதாயம் கடவுளையும் பார்த்திருக்கலாம்; குடும்பத்தைச் சுகமாகவும் நடத்திச் சென்றிருக்கலாம். தோணியில் காட்சி தந்த சிவனைத் தோணியப்பர் என்று துதிக்கிறார்கள். தோணியப்பர் வாழ்க்கையின் குழப்பத்தைத் தீர்க்கவே தோணியில் வந்தார். இதை மக்கள் அறிய வேண்டும். அறிந்தால் பிரச்சினை இல்லை.

இக்கருத்தை எளியவன் இங்கு ஏன் எழுதுகிறேன் தெரியுமா? காரணம் இது தான். உலகில் வாழும் எல்லா மனிதர்களுக்கும் வாழ்க்கை வேண்டும். வாழ்க்கை இல்லாமல் கடவுள் வேண்டும் என்று சொல்லிப் பயனில்லை. வாழ்க்கையின் இடையிலே தான் பக்தன் கடவுளைச் சந்திக்கிறான். இதுவே உண்மை. உண்மையை உணர்ந்தவர்கள் இதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சொன்னால் என்ன நடக்கும் என்று கேட்கிறீர்களா? ஒரு புதிய உலகம் பிறக்கும். மனிதர்களில் பலர் பிரச்சினையில்லாத குடும்ப வாழ்க்கையைத் துவக்குவார்கள். இறை வழிபாடு என்ற பூசையைத் தங்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும் கொள்ளுவார்கள்.

வேறு சிலர் வேறு ஒரு வேலையைச் செய்வார்கள். மேற்சொன்ன கருத்தினால் தெளிவடைந்து தங்களது வாழ்க்கை முழுவதையும் கடவுளுக்காகவே அர்ப்பணம் செய்வார்கள். வேறு சிலர் கடவுளை எண்ணி சமுதாயத் தொண்டு செய்வார்கள். இது எப்படி முடியும்? விளக்கமாகச் சொல்லுங்கள் என்றான் ஒருவன். ஆர்வமுள்ள குரு சொன்னதைக் கேளுங்கள்.

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு அதாவது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பயணிகளை ஏற்றிச் செல்லுகின்ற கப்பல் உண்டு. இதற்கு பயணிகளின் கப்பல் என்று

பெயர். இது போல மனிதன் பிரச்சினையில்லா குடும்பத்தை நடத்திக் கொண்டு கடவுளைத் தொழுவான்.

கப்பல்களிலே சரக்குக் கப்பல் என்று ஒன்று உண்டு. இது உணவு தானியங்கள், பிற பொருட்கள் போன்ற பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்லும். இது சிலர் கடவுளை முன் வைத்து சமுதாயத் தொண்டு செய்வதற்கு பொருந்தும்.

இதைத் தவிர வேறு ஒரு கப்பல் உண்டு. அதுவே நாட்டைக் காக்கும் இராணுவக்கப்பல், இது நாட்டையும் மக்களையும் காப்பாற்றும். இது போல துறவறம் பூண்டு சிலரோ பலரோ ஞானத்தைப் பெறுவார்கள். இவர்கள் கடவுளையே காப்பாற்றுவார்கள். உலக மங்களின் மனதிலிருந்து இறைவன் அழியமாட்டான். ஞானவான்கள் இக்கருத்திற்காக பாடுபடுவார்கள் என்று அறியுங்கள். இச்சமயத்தில் ஒருவர் ஒரு சந்தேகத்தைத் தன் மனதில் எழுப்பிக் கொண்டார். அச்சந்தேகம் இதுவே. ''ஐயா...போர்க்கப்பல் என்று ஒன்று இருக்கிறதே...அதைப் பற்றி தங்கள் கருத்தென்ன? நாட்டுக்கு நாடு போர் மூண்டால் போர்க் கப்பலைக் கொண்டு தாக்குகிறார்கள்''.

''இக்கருத்தோடு உலகிலுள்ள பல சமயங்கள் அதன் வேறுபாடுகள் அவரவர்களின் தெய்வங்கள், இதைப் பற்றி..இதைப் பற்றி'' என்று இழுத்தார். தன்கருத்திற்கு அந்த அன்பர் விளக்கம கேட்டார்.

அன்பு உள்ளம் கொண்ட மக்களே கடவுளை வைத்துப் போர் செய்கின்ற மனிதன் மனிதனல்ல. பிறப்பால்கூட அவன் மனிதனேயல்ல. மிருகம் தான். ஒருவனை ஒருவன் அடித்துக் கொண்டு அவனோ அல்லது மற்றவனோ அழியவே போர் தொடுக்கிறான். இதனால் மதச் சண்டையும் கடவுட் சண்டையும் பொய்யே.

உண்மையில்லை, மதச்சண்டை கடவுட் சண்டை இவைகளில் மனிதனே அழிவான். அழிகிறான். கடவுளும் சமயமும் அப்படியே இருக்கப் போகின்றன. அதனால் கடவுளுக்கு போர்க்கப்பல் உதாரணமே இல்லை என்றார் ஞானிகள். கேட்ட மனிதன் மகிழ்ந்தான்.

இனிமேல் கப்பல் என்ற சொல்லை மனிதனுடன் இணைத்தால் சம்சார சாகரம்..வாழ்க்கைக் கடல் இப்படி எல்லாம் எண்ணாதீர்கள். கப்பல் என்றவுடன் மனிதனின் உடலை நினையுங்கள். வாழ்க்கை என்றவுடன் கடலை எண்ணுங்கள். குடும்ப சுகம் என்று சொன்னவுடன் அதுவே உழைப்பு என்று எண்ணுங்கள். பயன் என்று சொன்னவுடன் அதுவே பூஜை என்று எண்ணுங்கள். கோயில் என்று சொன்னவுடன் அதுவே மனிதனின் ஒய்வு என்று எண்ணுங்கள். இராஜகோபுரம் என்று சொன்னவுடன் அதுவே மனிதனின் சிந்தனை என்று எண்ணுங்கள். கோயில் மணி என்று சொன்ன

திருவெலாம் ஒரு கருவிலானவள்

தெய்வ மாதா வாழியே!

சீர்குலாவும் பெரிய நாயகி

தேவ தேவீ வாழியே.

—சக்தி சரணம் ஆயிரம்

வுடன் அதுவே செல்லுபடியாகின்ற மனிதனின் வாக்கு என்று எண்ணுங்கள்.

கருவறை அல்லது கர்ப்பக்கிரகம் என்று சொன்னால் இதுவே மனித உள்ளம் என்று சொல்லுங்கள். கும்பாபிஷேகம் அல்லது கோபுர கலசம் என்று சொன்னால் இதுவே எனது மூச்சு அது ஒன்றே என்றும் மனிதனுக்கு விளங்காதது என்று சொல்லுங்கள்.

விளங்காததே இறைவனின் வித்தை. அதை விளங்கிக் கொள்வதே வாழ்க்கைக்கு மெத்தை. இதையறியாமல் போய்விட்டால் பிறப்பே ஒரு சொத்தை. ஞானிகள் சொத்தை யில்லை என்ற மகிழ்வோடு தோணியப்பரை வணங்கினார்.

மயிலையில் மாண்புற்ற அறுபத்துமூவர் விழா

டாக்டர் த. அமிர்தலிங்கம்

புன்னைவனங்கள் நிறைந்த இடத்தில், மயில் வடிவில் வந்து உமையம்மையார் சிவ பெருமானைப் பூஜை செய்த இடம் என்பதால் மயிலைக்கு மயிலாப்பூர் என்ற பெயர் வழங்கு கிறது என்பதைத் தலபுராணம் கூறுகிறது.

''புன்னாகவனத் தெழில்சேர்
கயிலைமலையுமை மயிலாய்ப் பூசை
செய்ய
நன்னாமத்தான் மயிலையென விளங்குமூதூர்''

என்று அமிர்தலிங்கத் தம்பிரான் தாம் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் திருமயிலையின் பெயர்க் காரணத்தை விளக்குகின்றார்.

1300 ஆண்டுகளுக்கு முன்பே அழகிய மாடவீதிகளைக் கொண்ட மலிவிழா மூதூராக திருமயிலை திகழ்ந்த சிறப்பை நாயன்மார்களும், ஆழ்வார்களும் போற்றியுள்ளனர். திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகம் ஒன்றால் என்பைப் பெண்ணாக்கிய அற்புதம் நடைபெற்றதும் இத்திருமயிலையில் தான்.

பன்னு தொல்புகழ்த் திருமயிலாபுரிப் பதியில் மன்னுசீர்ப் பெருவணிகராக சிவநேச செட்டியார் தோன்றி, சிவ வழிபாட்டாலும், சிவனடியார் வழிபாட்டாலும் சிறப்புற்று விளங்கினார்.

''ஆறு சூடிய முடியினார் அடியவர்க் கன்பால்
ஈறிலாத பூசனைகள் யாவையும் மிகச்செய்து
மாறிலா மறையவர்க்கு வேண்டின எலாம்
அளித்துப்
பேறு மற்றிதுவே எனும் பெருங்களி சிறந்தார்'

என்று சிவநேசரைச் செந்தமிழால் போற்றுகிறார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

சிவபூசை பயனாக சிவநேசருக்குத் திருமகள் போன்ற எழிலுடன் ஒரு பெண்மகவு பிறக்கின்றது. ''பூம்பாவை'' எனும் பெயரிட்டு சீரோடும் சிறப்போடும் வளர்க்க, அக்குழந்தையும் ஏழாண்டு அடைகின்றாள். நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தரின் சைவப் பொற்பணிகளைக் கேட்டுக் கேட்டு, அவருடைய பரமபக்தராகிப் போன சிவநேசர் திருஞானசம்பந்தருக்கே தம்மகள் பூம்பாவையை மணமுடித்துக் கொடுக்க தம்உள்ளத்தில் பேராசையை வளர்த்துக் கொண்டு விடுகிறார்.

''கற்ற மாந்தர்வாழ் காழிநாடு
உடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும்
பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன்''

என்று காணும் எவரிடமும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவாராம் சிவநேசர்.

ஒருநாள் பூ பறிக்கும்போது பூம்பாவையைப் பாம்பு தீண்டி விடுகின்றது. தீயிடைப்பட்ட மாலை போல பூநாகம் தீண்டிய பூம்பாவை விஷமேறித் துடிக்கின்றார். மயங்கித் தரையில் சாய்கின்றார், மயிலையில் வதியும் அத்தனை

இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கு

இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் நம் அறநிலையத்துறை அரங்கு இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத புர ஆலய இராஜகோபுரமாதிரி வடிவில் மிக அற்புதமாக வடிவமைக்கப்பட்டு விளங்குகின்றது. நம் அறநிலையத்துறை அரங்கின் சிறப்பிற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் தீட்டி வைக்கப் பெற்றுள்ள நம் ஆணையாளர் அவர்கள் எழுதியுள்ள **''தெய்வத் தமிழகத்தில் ஷண்மத வழிபாடு''** எனும் உரைச் சித்திரம் ''திருக்கோயில்'' வாசகர்களுக்காக இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.



16.3.92 அன்று மயிலையில் நடைபெற்ற அறுபத்துமூவர் விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சரும், திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினருமான திருமிகு கே. ஏ செங்கோட்டையன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திருமிகு இராசகோபாலன் ஐ.பி.எஸ்., அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ்., ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

மருத்துவர்களையும் வரவழைத்து வைத்தியம் பார்க்கிறார் சிவநேசர். ''வையகத்துள்ளோர் இந்த வெவ்விடம் ஒழிப்பவர்க்கு ஈகுவன் அந்தமில் நிதிக்குவை'' என்று பறையும் அறைவிக்கின்றார். சிவநேசர் விஷம் தீண்டி மாண்டு போன பூம்பாவையை எரியூட்டாமல் மூன்று நாள் வரை வைத்திருந்து மருத்துவத் துறையில் தலைசிறந்து விளங்கிய மருத்துவ வல்லுநர்கள் அனைவரையும் வரவழைத்துப் பார்த்தும் பயனில்லாமல் போய்விடவே இறுதியில் வேறுவழியின்றி பூம்பாவையின் உடலைத் தகனம் செய்கின்றார் சிவநேசர்.

''உடைய பிள்ளையார்க்கு என இவள்தனை
உரைத்ததனால்
அடைவு துன்புறுவதற்கு இலையாம்.''

என்று மனம் தேறுகிறார் சிவநேசர்; 'திருஞான சம்பந்தருக்கு அர்ப்பணித்து இருந்த பூம்பாவை இறந்து போனாள்; இதில் நான் கவலையடைய ஒன்றுமில்லை; இருந்தாலும் திருஞானசம்பந்தர் வரும் போது அவரிடம் காட்டுவதற்காக பூம்பாவையின் அஸ்தியை (எலும்பும் சாம்பலும்) ஒரு குடத்தில் சேமித்து வைப்பேன்'' என்று எண்ணி சிவநேசர் அவ்வண்ணமே செய்கிறார். அஸ்திக் குடத்தைப் பொன்முத்து அணிகலன்களாலும், பூந்துகிலாலும் அலங்கரித்து கன்னிமாடத்தில் பாதுகாப்பாக வைத்து பூசைகள் செய்து வருகிறார்.

இவ்வாறு 5 ஆண்டுகள் கழியும்போது ஒரு நாள் திருஞான சம்பந்தர் திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டுத் திருமயிலைக்கு வரவிருக்கிறார் என்பதை அறிந்து களிபேருவகை கொள்கின்றார் சிவநேசர். திருஞானசம்பந்தரின் வரவை அறிவித்த அடியார்க்குப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கி, திருமயிலையிலிருந்து திருவொற்றியூர் வரை திருஞானசம்பந்தர் வரும் சாலை வழியெங்கும், நடைக்காவணம் (இரத்தினக் கம்பளம்) விரித்து வரவேற்கின்றார் சிவநேசர்; வீதியெங்கும் மகரத் தோரணம், வாழை, பாக்கு மரங்கள் கட்டி வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க, ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தலும், அடியவர்க்கு அன்னதான மண்டபங்களும் அமைத்து ஏக தடபுடலாக முத்தமிழ் விரகர் திருஞானசம்பந்தரை வரவேற்கின்றார் சிவநேசர்.

''ஆறுசூடினார் திருமகனார் அணைந்தார்'' என்று எங்கும் பேராரவாரம் எழுகின்றது. முத்துப்பல்லக்கிலிருந்து இறங்கித் தொண்டர்கள் புடைசூழ, மயிலாபுரி திருநகர் வந்து சேரும் திருஞானசம்பந்தர், கபாலீச்சரம் வந்து சேர்ந்து, துங்கநீள்சுடர்க் கோபுரம் தொழுது,

கோயிலுக்குள் புக்கு அருளி, மங்கைபங்கர்தங் கோயிலை வலங்கொண்டு வணங்கி, செங்கை களை தலைக்குமேற் குவித்து, கபாலீசுவரர் சந்நதிக்கு வந்து சேருகிறார்.

''தேவ தேவனைத் திருக்கபாலீச்சரத் தமுதைப்
பாவை பாகனைப் பரிவுறு பண்பினாற் பரவி
மேவு காதலின் விரும்பிய விரைவினால் விழுந்து
நாவின் வாய்மையிற் போற்றினார் ஞான
சம்பந்தர்.''

என்று திருஞானசம்பந்தர் வழிபட்ட திருக் காட்சியை இன்றும் நம் கண்கள் கண்டுகளித் திடுமாறு கவிதைச் சித்திரமாகக் காட்டுகின் றார் சேக்கிழார் பெருமான்.

கபாலீச்சரத் தமுதை வழிபட்டுத் திருஞான சம்பந்தர், சந்நிதிக்கு வெளியே வரும் போது தான் அவரிடம் அடியவர்கள் சிவநேச ரைப் பற்றியும் பூம்பாவையின் அஸ்திக் குடத் தைப் பற்றியும் தெரிவிக்கிறார்கள். ''அருமை யாற் பெருமகள் என்பு நிறைந்த அக்குடத்தை கோயில் திருமதிற்புறம் கொணர்க' என்று திருவாய்மலர்கிறார் திருஞானசம்பந்தர். பெரு மகிழ்ச்சியுடன திருஞானசம்பந்தரின் திரு வடிகளைப் பலமுறையும் விழுந்து வணங்கிய சிவநேசர், அவர் உரைத்தவாறே மூடுபல்லக் கில் வைத்து அஸ்திக்குடத்தைக் கோயிலின் மேற்கு வாயிலுக்கு வெளிப்புறமாகக் கொண்டு வந்து சேர்க்கிறார். அஸ்திக்குடம் பல்லக்கி லிருந்து எடுத்து வெளியே வைக்கப்படுகிறது. மாடம் ஓங்கிய மயிலை மாநகர் மக்கள் மட்டு மன்றி இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட மற்ற மற்ற ஊரில் வாழும் மக்களும், பிற சமண சமயத்தைச் சார்ந்தவரும் என்ன அதிசயம் நிகழுமோ என்பதைக் காண, கோயிலின் மேற்கு வாயிலருகே வந்து கடலெனத் திரண்டு விடு கின்றனர். திருஞான சம்பந்தர் ''மட்டிட்ட புன்னையங் கானல்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடத் தொடங்குகின்றார்.

''பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்'' ''ஐப்பசி ஓணவிழா காணாதே போதியோ பூம்பாவாய்'' 'கார்த் திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பா வாய்'' ''ஆதிரைநாள் காணாதே'' போதியோ பூம்பாவாய் ''தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்'' ''மாசிக் கடலாட்டுக் காணாதே போதியோ பூம்பாவாய்'' ''பங்குனி உத்திர ஒலிவிழா காணாதே போதியோ பூம்பாவாய்'' ''பதினெண் கணங்கள் அட்டமி நாள் காணாதே போதியோ பூம்பாவாய்'' ''பொற் றாப்பு காணாதே போதியோ பூம்பாவாய்'' ''பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பா வாய்'' என்று மயிலையின் புகழ் பெற்ற திரு விழாக்களைக் காணாமலே பூம்பாவை வான கம் போகலாமா எனக் கேட்டு திருஞானசம் பந்தர் பாடப்பாட, அஸ்திக்குடத்திலிருந்த எலும்பும் சாம்பலும் திருஞானசம்பந்தர் வாக்கே அமுதமாகி, ஏழாண்டில் மறைந்த பூம்பாவை இப்போது பன்னிரண்டு ஆண்டில் என்ன வடிவ வளர்ச்சியோடு விளங்குவாளோ அத்தகைய அற்புத வளர்ச்சியெல்லாம் ஒருங்கு



மயிலையில் பங்குனிப் பெருவிழாவின் ஏழாம் நாள் (15.3.92) அன்று பல்லாயிரக்கணக்கான பக்தர் கள் காணத் தேர்த்திருவிழா நடைபெற்றது.

பெற்று, பதிகத்தின் பத்தாம் பாடலைப் பாடிய போது தாமரை மொட்டு மலர்வதைப் போல குடம் உடைந்திட, தன் கோற்றொடிச் செங்கை முன் தோன்றிட, அழகினுக்கு அணி யாக திருமகளே வந்து தோன்றியதைப்போல தோன்ற, ''அரகர' எனும் அடியவர்களின் வாழ்த்தொலி வானத்தைப் போய் தாக்குகின் றது என்று வர்ணிக்கிறார் தெய்வச்சேக்கிழார் பெருமான்.

''தேவரும் முனிவர் தாமும்
திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி
பொழிந்தனர் ஒழிந்த மண்ணோர்
யாவரும் இருந்த வண்ணம்
எம்பிரான் கருணை என்றே
மேவிய கைகள் உச்சி
மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார்''

(பெரிய புராணம்)



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் இணைஆணையாளர் திருமிகு ந. ச. இராமச்சந்திரன், பி.ஏ.பிஎல்., அவர்கள் திருத்தேரின் வடம் பிடிக்கிறார்கள்.

கற்பகத்தின் பூங்கொம்போ எனத் தோன்றிய பூம்பாவையைத் திருமணம் கொள்ள வேண்டுமென திருஞான சம்பந்தரை வேண்டுகிறார் சிவநேசர்; 'கண்ணுதலார் கருணையால் யான் உற்பவித்த பூம்பாவை என் மகளே யாவாள்' என்று கூறியருளும் திருஞானசம்பந்தர் பூம்பாவையை கன்னிமாடத்தே வீற்றிருந்து சைவ சமயத் திருப்பணிகள் ஆற்றி வர திருவருள் புரிகின்றார்கள். இத்தகைய அற்புதம் நடைபெற்ற மயிலையம் பதியில் ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனிப் பெருவிழாவின் எட்டாம் நாள் அன்று அங்கம்பூம்பாவை உயிர்பெறும் திருவிழாவும், அறுபத்து மூவர் திருவிழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்வாண்டு 9-3-92 முதல் 18-3-92 முடிய நடைபெற்ற பங்குனிப் பெருவிழாவின் எட்டாம்நாள் 16-3-92 அன்று பகலில் திருஞான சம்பந்தருக்கும், சிவநேசருக்கும் மகாஅபிடேகம் நடைபெற்றது. பிற்பகல் 2.00 மணிக்கு சிவநேசர் திருஞானசம்பந்தருடன் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார். இறைவனார் ஆணைக்கிணங்க குளக்கரைக்கு அங்கம்பூம்பாவையின் அஸ்திக்குடம் எழுந்தருளச் செய்ய, பக்தர்கள் யாவரும் காண திருஞான சம்பந்தரின் 'மட்டிட்ட' பதிகம் பாடி எலும்பைப் பெண் உருவாக்கி மண்டகப்படி நடத்தப்பட்டது. பிறகு திருஞான சம்பந்தர், சிவநேசர், பூம்பாவை இறையடியார்கள் புடைசூழ மாடவீதி வலம் வந்து 16 கால் மண்டபம் சேர்ந்தனர். பஞ்ச மூர்த்திகளுடனும், அறுபத்துமூன்று நாயன்மார்களுடனும், கபாலீசுவரர் காட்சி கொடுத்தருள அறுபத்து மூவர் மாடவீதி வலம் வரும் விழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக்குளச்சீரமைப்பிற்கு ஒரு கோடி ரூபாய் நிதி செலவு செய்ய இசைவளித்து அதிலும் ரூ. 35 லட்சத்தை முதற்கட்ட செலவுகளுக்கு வழங்கி ஆணை பிறப்பித்தது இவ்வாண்டு அறுபத்து மூவர் விழாவின் உற்சாகத்தைப் பன்மடங்கு அதிகமாக்கி விட்டதென்றே கூற வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திருமிகு செங்கோட்டையன் அவர்கள் அறுபத்துமூவர் விழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர் அவர்களும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திருமிகு இராதாகிருஷ்ணன் அவர்களும் விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்தனர்.

அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தக்க அறிவுரைகள் வழங்கி, விழா ஏற்பாடுகள் சிறக்கச் செய்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும், துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம் அவர்கள் அறுபத்துமூவர் விழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு வசதியாக வழிபடுவதற்கு ஆவன செய்திருந்தார்கள்.

''வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்யை விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.''

வித்யாவாசஸ்பதி
டாக்டர் இரா. நாகசாமி [4]

பாசுபதர், காளாமுகர் என்ற பெயரைக் கேட்டாலே சிலர் அவர்கள் ஏதோ வேண்டத்தகாதவர் என்றோ பயங்கரமான பழக்க வழக்கங்களை கொண்டிருந்தவர்கள் என்றோ எண்ணுகின்றனர். எழுதுகின்றனர். வரலாறும் அறியாது தத்துவமும் அறியாது குதர்க்க வாதிகள் எழுதும் கூற்றாம் இஃது எனத் தள்ளி விடுதலே சால்புடைத்தாம். பாசுபதர் என்ற சைவம் பற்றி ஆய்வோம்.

அப்பர் பெருமான், சம்பந்தர் ஆகியோர் காலங்களில் 18 புராணங்களும் முழுவடிவெடுத்து விட்டன என அவர்களது தேவாரத்திலிருந்து அறிகிறோம். இருப்பினும் அப்பர் பெருமான் தமது தேவாரத்தில் இலிங்க புராணத்தைப் பெயரிட்டு குறிப்பதிலிருந்து லிங்கபுராணம் தமிழகத்தே அப்பருக்கும் முன்பே சிறப்பிடம் பெற்றுவிட்டது என்பதில் ஐயமில்லை. பிற்காலத்தில் இப்புராணம் 1600-ல் வரகுணராம பாண்டியனால் மொழி பெயர்க்கப்பட்டது. இலிங்கபுராணம் முழுக்க முழுக்க பாசுபத தத்துவத்தை எடுத்து உரைக்கும் புராணம் என்பது எனது கருத்து. முதலிலிருந்து இறுதிவரை ஒவ்வொரு கட்டத்திலும் இது பாசுபத தத்துவத்தையே விளக்கிச் செல்வதை கண்ணுறும் போதும், பாசுபத சூத்ரங்களை எழுதிய லகுளீசரை இந்நூல் பெயரிட்டு குறிப்பதிலிருந்தும் மேற்குறிப்பிட்ட கருத்துக்கு ஐயமேயில்லை. மேலும் இது வேதத்தைப் பின்பற்றி வேதத் தத்துவங்களின் அடிப்படையில் வளர்ந்த 'வைதிக பாசுபதநூல்' என்பது வெளிப்படை.

இந்த வழியைப் பின்பற்றிய பல முனிவர்களின் பட்டியலை இந்நூல் முதலில் குறிக்கிறது. இவர்களில் கௌதமன், கபிலன், கோசிகன், வசிட்டன், வாமதேவன். கர்க்கன், காசிபன் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயருடைய புலவர்கள்சங்க காலத்திலேயே தமிழகத்தில் இருந்தனர் என்பது குறிக்கத் தக்கது. இவர்களைக் கூறுமிடத்து லிங்க புராணம் இவர்கள் பிரும்மத்தில் திளைத்தவர்கள் என்றும், பிரும்ம வாதிகள் என்றும் பரப்பிரும்மத்திற்கு சமமானவர்கள் என்றும் கூறுகிறது. அதாவது பிரும்மவாதிகள் என்றால் உபநிஷத் கருத்துக்களை ஆய்ந்தவர் என்பது பொருள். இதிலிருந்தே வேதாந்தக் கருத்துக்களை ஆய்ந்து வேதமார்க்கத்தைப் பின்பற்றியவர் என்பது தெளிவு.

லிங்கபுராணம் இவர்கள் பின்பற்றிய மார்க்கத்தை ''ஞானயோகம்'' என்று கூறி இந்த ஞானயோகம் என்பது தான் பாசுபத யோகம் என்று கூறுகிறது. ஆதலின் ஞான யோகம் என்பதும் பாசுபத யோகம் என்பதும் ஒன்றே.

''விமலா: பிரும்ம பூயிஷா; ஞானயோக
பராயணா
ஏதே பாசுபதா: ஸித்தா:
பஸ்மோத்தூளிதா விக்ரஹா;
சிஷ்யா: ப்ரசிஷ்யா; ச
ஏதேஷாம் சதமோத ஸஹஸ்ரஸ:
ப்ராப்ய பாசுடதம் யோகம்
ருத்ர லோகாய ஸ்ம்ஸ்திதா;

முன்கூறிய முனிவர்கள் தூய்மையானவர்கள். பிரும்மத்தில் திளைத்தவர்கள். ஞான யோகத்தைப் பின்பற்றுபவர்கள். தங்கள் உடலில் திருநீற்றைப் பூசி விளங்குபவர்கள், சித்தர்கள். இவர்கள் பாசுபதர்கள். இவர்களுக்கு சிஷ்யர்கள், பரசிஷ்யர்கள் என சிஷ்ய பரம்பரை நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் உண்டு. இவர்கள் பாசுபதயோகத்தை அடைந்து ருத்ரலோகத்தில் நிலைத்திடுவர் என்பது பொருள். பாசுபத யோகிகள் திருநீற்றைத் தரிப்பதைக் குறிப்பாக குறிக்கப்பட்டுள்ளதைக் காண்க.

இதற்கு ஏன் பாசுபத யோகம் என்று பெயர் என்று லிங்க புராணம் கூறுகிறது. தேவர்கள் முதலாக, பிசாச கணங்கள் இறுதியாக உள்ளவர்களுக்கு பசுக்கள் என்று பெயர். இவர்களுக்கெல்லாம் தெய்வம், தலைவர், பவனாகிய சிவன்-பசுபதி என அழைக்கப்படுகிறார். அவரால் பசுபதியினால் தோற்றுவிக்கப்பட்டது இந்த யோகம். ஆதலின் இதற்கு பாசுபதயோகம் என்று பெயர்.

''தேவாதய: பிசாசாந்தா:
பசவ: பரிகீர்த்திதா:
தேஷாம் பதித்வாத் சர்வேச:
பவ: பசுபதி:ஸ்மிருத:
தேன பிரணீத: ருத்ரேன
பசூனாம் பதினா த்விஜா
யோக: பாசுபதோ ஞேய:
பராவர விபூதயே''

''அத்தரி பெயர் அருந்தவன் முதலானோர் யாருக்கும்
மெய்த் தவம் புரி வியாதற்கும் வெள்விடை யுயர்த்த
நத்தன் இன்னருள் புரிந்தனன் நிகழ்த்து மத்தவத்தோர்
பைத்தபாம்பணி பசுபதி யோகம் எய்தினரால்''

என இப்பகுதியைச் சுருக்கித் தமிழ் லிங்க புராணம் கூறுகிறது.

இந்த பாசுபதர்கள் யோகத்தால் தான் விடு பேறடைய முடியும் என்ற சித்தாந்தம் உடையவர்கள். இதை மிக அழகாகவும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும் இவர்கள் கூறுகிறார்கள். இதை இலிங்கபுராணம் தெளிவாகக் கூறுகிறது. யோகத்தால் வீடு பேறடைகிறோம். யோகம் ஞானத்தால் வருகிறது. ஞானம் மனத்தெளிவிலிருந்து தோன்றுகிறது'' என அனைத்திற்கும் அடிப்படை சித்தத்தில் ஏற்படும் தெளிவு, தெளிவை அடைந்தால் சிவனை அடையலாம் என்பது இவர்களது கொள்கை.

''பிரஸாதாத் ஜாயதே ஞானம்
ஞானாத் யோக: ப்ரவர்த்ததே
யோகேன ஜாயதே முக்தி;
பிரஸாதாத் அகிலம் தத்;

''பிரஸாதம்'' என்ற வடமொழிச் சொல்லுக்கு இங்கு ''தெளிவு'' என்பது பொருள். அந்த சிந்தையுட் பிரஸாதத்தை எப்படி பெறுவது என மிகவும் விரிவாக பாசுபதக் கொள்கைகள் கூறுகின்றன.

இங்கு தமது தேவாரத்தில் அப்பர் பெருமான் குறிப்பிட்டுள்ள மிக அரிய சொற்றொடர் ஒன்றினைக் காணல்வேண்டும்.

''சிந்தையும் தெளிவுமாகி
தெளிவினுட் சிவமதாகி''

என்று திருவாப்பாடி பதிகத்தில் அப்பர் கூறுகிறார். இதைக்காணும்போது பாசுபத யோகக் கருத்து இது என்பதில் ஐயமிருக்க முடியாது. ''சிவன் என்பது சிந்தையுட் தோன்றும் தெளிவும், தெளிவினில் வெளிப்படும் ஞான யோகமே'' எனவும் அப்பர் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

யோகம் எப்படி இருக்கும்? ஞானம் என்றால் என்ன? தெளிவு எனில் என்ன? இந்த யோகம் எந்த இடத்தில் தோன்றுகிறது? இதை எப்படி அடையலாம்? போன்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. இதற்கும் தெளிவான விடையை லிங்கபுராணம் குறிக்கிறது

''ஆத்மாவானது எல்லாப் பொருள்களின் ஞானத்தை - அறிவை பெறுகிறதைத் தான் யோகம் என்று சொல்கிறோம். அந்த ஞானமாவது எப்பொழுதும் ஒரே நிலையில் ஒன்றி நிற்கும் நிலை ஏற்படும். அது சிந்தையில் ஏற்படும் தெளிவினால்தான் தோன்றுகிறது. தெளிவின் உருவம் என்ன என்றால் யாராலும் அதை விவரிக்க முடியாது. அனுபவத்தினால் தான் அறிந்து கொள்ள முடியும். அதுவும் மனிதரிடத்துப் படிப்படியாகத் தான் ஏற்படும். இவ்வாறு ஏற்படும் யோகம் ''மாகேச்வரபதம்' என்று அழைக்கப்படும். இதையே நிர்வாணம் என்றும் அழைப்பர்.

இந்த யோகம் ஏற்பட அடிப்படைக் காரணம் ஞானம். இந்த ஞானம் ஏற்பட அடிப்படைக் காரணமாய் அமைவது தெளிவு. எவன் ஒருவன் விஷயங்கள் பால் தனது சிந்தனை செல்வதைத் தடுத்து நிறுத்துகிறானோ அவனுக்கு யோகம் கிட்டுகிறது. அதாவது இந்திரியங்களின் போக்கிலே சிந்தனை போக விடாது தடுத்து நிறுத்துவது யோகம்.

''யோக: நிரோத; விருத்தேசு சித்தஸ்ய'

என்று லிங்க புராணம் கூறுகிறது. இம்மனிதன் தனது ஞானத்தால், விஷயங்களால் ஏற்படும் பாபங்களைச் சுட்டெரிக்கிறான். சிந்தனையின் தன்னிச்சைப் போக்கைத் தடுத்து நிறுத்த எட்டு வகையான பயிற்சிகள் உள்ளன அவற்றை 'எண்வகை சாதனங்கள்' அல்லது 'அஷ்டாங்க யோகம்' என்று கூறுவர். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணா, த்யானம், சமாதி என்ற எட்டாகும். இவை விரிவாக பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. இலிங்கபுராணம் இவை ஒவ்வொன்றின் விளக்கத்தையும் கொடுக்கிறது. ஆதலின் இங்கு அதை விரித்துரைக்கப் போவதில்லை. ஆயினும் ஒரு முக்கியமான செய்தி மட்டும் கூறத்தான் வேண்டும். இயமம் என்பதின் கீழ் அஹிம்சை, சத்யம், அஸ்தேயம் (பிறர் பொருள் கவராமை), பிரம்மச்சர்யம், அப்ரிக்ரஹம் என்பவை குறிக்கப்படுகின்றன. இவை எல்லாம் மனதை அடக்கும் முதல் படிகள், இயமம் என்ற பெயர் பெற்றவை. இவற்றில் பிரும்மசர்யம் என்பதைப் பற்றி இலிங்கபுராணம் ஒரு விளக்கம் கூறுகிறது. பிரும்மசர்யம் என்றால் என்ன? பெண்களிடம் போகம் துய்க்காமல் இருப்பது பிரும்மசர்யம் என பொதுவாக அனைவரும் கொள்வர். அவ்வாறெனில் ஒரு பெண்ணை மணந்து அவளுடன் இல்லறம் நடத்துபவனுக்கு சிவயோகம் கிட்டுமா? கிட்டாதா? என்பது கேள்வி. இதற்கு லிங்க புராணம் விடையளிக்கிறது. மணம் செய்து கொள்ளாதவனாகட்டும். சந்யாசம் மேற்கொண்டவனாகட்டும், சிற்றின்பம் சேராமை பிரும்மசர்யம் எனப்படும். ஆனால் திருமணம் புரிந்து கொண்டவன் விதிப்படி மணந்த தன் மனையாளுடன் இன்பம் துய்ப்பதும் பிறர் மனை நயக்காமல் இருப்பதும் பிரும்மசர்யமே எனக் கூறுகிறது.

''மைது னஸ்ய அப்ரவிருத்தி:
மனோ வாக்காய கர்மனா
பிரும்ம சர்யம் இதி ப்ரோக்தம்
யதீனாம் பிரும்ம சாரீனாம்
ஸ்வ தாரே விதிவத் கிருத்வா
நிவிருத்தி; ச அன்யத: ஸதா
மனஸா கர்மனா வாசா
பிரும்ம சர்யம் இதி ஸ்மிருதம்''

இதைத் தமிழில் வரகுண ராமன் மொழி பெயர்த்துள்ளார்.

''முற்றத் துறந்தோர், இல்லினொடு
  முதிர் கானத்துத் தவம் புரிவோர்
மற்றை பிரமச் சரியத் தோர்
  மனையாள் இறக்க உறைகின்றோர்
உற்ற மனம், மெய், மொழி இவற்றால்
  உருவத் தடங்கண் மடமாதர்
பொற்ற கழைத்தோள்புணராமை
    புகலும் பிரமசர்யமே.''
'ஒல் என்று ஒலிக்கும் திரைப் பரவை
  உடுத்த ஞாலத்து அழல் ஓம்பி
இல்லின் உறைவோன் பிறர் மனைகள்
  விரும்பானாகி இயல்பால் தன்
முல்லை மனைவி நல் எழில் சேர்
  முத்த முரிஞ்சு முலைமுகட்டில்
சொல்லுங் காலை முயங்குவதும்
  துகள்தீர் பிரும்மசர்யமே.''

என அப்பாடலகள் அமைகின்றன. ஆதலின் இல்லறத்தில் நிற்பவனுக்கும் சிவயோகம் கிட்டும் என்பது பாசுபதர் கொள்கை. மேலும் போகங்களால் யாருக்கும் நிலையான திருப்தி என்பது ஏற்படுவதில்லை. ஆதலின் படிப்படியாக போகங்களிலிருந்து மீள வேண்டும் எனவும் லிங்க புராணம் கூறுகிறது. நியாயமான வழிகளினால் பெறும் பொருள்களினால் எவன் சந்தோஷமாக இருக்கிறானோ அவன் நல்ல விரதத்தை மேற்கொண்டவன் என்றும் இந் நூல் கூறுகிறது. கடைப்பிடிக்க வேண்டிய மற்ற முறைகளையும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது.

இப்பாசுபத யோகம் என்ன எனில் சிந்தையில் தெளிவு ஞானத்தைக் கொடுக்கும். ஞானம் மனம் ஒன்றும் யோகத்தைக் கொடுக்கும். யோகம் முக்தியைக் கொடுக்கும். என்பர் இதைத்தான் ''யோகேன ஜாயதே முக்தி'' என்கிறது லிங்க புராணம். இங்கு அப்பர் பெருமானின் ஒரு பாடலைக் காண்போம்.

''சித்தத்தை ஒன்ற வைத்தார்
  சிவமதே நினைய வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார்
    முறை முறை நெறிகள் வைத்தார்''

சித்தத்தை ஒன்ற வைத்தல் என்பது யோகம். யோகத்தில் சிவத்தை ஒரு மனதாக நினைத்தல் இயலும். இதுவே ''சிவமதே நினைய வைத்தல்'' இந்நினைப்பு ஏற்படும் போது முக்தி கிட்டுகிறது. இதை அடையத்தான் அஷ்டாங்க யோகத்தை வைத்தார். இதுதான் ''முறைமுறை நெறிகள் வைத்தார்'' என்பது. இவற்றை வைத்தவரும். சிவபெருமானே-பசுபதியால் வைக்கப்பட்டது. ஆதலின் இது பாசுபத யோகம் ஆயிற்று.

லிங்க புராணத்தில் உள்ள கருத்துக்கள் அப்பர் பெருமானின் வாக்கில் பிரதிபலிப்பதை இங்குக் கண்டோம்.

(தொடரும்)

'ஆங்கிரச' ஆண்டே வருக வருக!

பேராசிரியர் புலவர் ஏறு ஆ. ஜெ. ராமசாமி

1. அம்புவிக்கன்புடன்ஆங்கிரசநங்காய்!
        போந்தினிதே
இம்பருறை எல்லா உயிர்கட்கும்
        விண்ணீர்பெய்திடச்செய்
கொம்பர் இளமாதர் கோதில் ஏருழுவர்
        சேர்ந்தழைக்க
அம்மையே! அன்பாக வந்துவதிந்திடப்
        பார்த்தருளே.

(நேரிசைவெண்பா)

2. இங்கித ஆங்கிரச ஆண்டு எழிலணங்கே
இங்கினிய மங்கையர்கள் இன்முகத்தோடு—
        அங்கை
வளைகுலுங்க வாழ்த்தி வரவேற்க எங்கும்
வளங்கொழிக்க வந்தருள்செய் ஈங்கு.

(எழுசீர்விருத்தம)

3. ஒங்குநன் மல்லிகை மௌவலோ டொள்ளிய
  மாண்பார் மணங்கமழ் மலர்களையும்
தீங்கவி மாபலா வாழை திராட்சை
  தேனோ டாப்பிள் பழங்களையும்
பாங்குடன் கொண்டிவண் சித்திரை முதலா
  பங்குனிப் பாவையர் வரவேற்க
ஈங்கெழில் ஆங்கிரசவெழில் நங்காய்!
  இன்முகமுடன்நீ எழுந்தருளே.

4. குவலயத் தொள்ளிய குறள்நெறி யுடனே
  குறைவிலா இறைநெறி கடைப்பிடித்தே
உவகையோ டறம்பொருள் இன்புயர்வீட்டையும்
  உற்றிட உயிர்க்கொலை புரியாதே
கவலையைக் களைந்து கடவுளைத் துதித்துக்
  கசடறக் கற்றோர் பண்பாட்டைத்
தவறா தனைவரும் ஏற்றிவண் வதிந்திடத்
  தகைசால் நெறியருள் புத்தாண்டே.

5. இறைநெறி இகவா தியங்கிடும் ஐம்பெரும்
  பூதமோ டெல்லையில் அனைத்துயிருய்
குறைந்தசிற் றறிவினைப் பெரிதெனக் கருதிக்
  கூறவும் ஒண்ணாக் கொடுமைகள் செய்வோர்
நிறைமொழி ஞானிகள் மறைமொழி நினைந்து
  நேர்நெறி வதிந்திட நெறிகாட்டி
குறைவிலா வளமுடன் குவலயம் ஓங்கிட
  கூர்ந்தருள் ஆங்கிரச மாதே.

(கலிவிருத்தம்)

6. உண்மை உலகிடை உயர்ந்திட வேண்டும்
திண்மைத் திரள்புவி திகழ்ந்திட வேண்டும்
நுண்மை ஞானமே நுகர்ந்திட வேண்டும்
வண்மை வான்புவி வளர்ந்திட வேண்டும்.

பல்லுயிரும் நலமாகப் பல்லாண்டு இனிது வாழ்க வாழ்க. பொங்கும் மங்களம் வையகம் எங்கும் பொலிக பொலிக.

ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர் துணை

தஞ்சாவூர் மாவட்டம்
வலங்கைமான் வட்டம்

அருள்மிகு ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில்

ஆலங்குடி - 612801

(குரு ஸ்தலம்)

மறைமிகு நன்னூல் வல்லோன் வானவர்க்கரசன் மந்திரி
நறைசொரி கற்பகப்பொன் நாட்டினுக் கதிபனாக்கி
நிறை தனம் சிவிகை மன்றல் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குருவியாழன் இறைவனடி போற்றி போற்றி

ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேசுவர சுவாமி திருக்கோயில் காவிரியின் தென் கரையில் அமைந்துள்ளது. ஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. அகத்தியரால் போற்றப்பட்டது. ஆதி சங்கரரால் வழிபடப்பட்டு உபதேசம் பெற்ற ஸ்தலம். இவ்வாலயம் தென் திசையில் தெட்சிணாமூர்த்திக்குத் தலமாகவும், நவக்கிரகங்களில் குரு பகவானுக்குப் பரிகார ஸ்தலமாகவும் இது விளங்கி வருகிறது. இங்குள்ள குரு தெட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் வஸ்திரம் சாற்றிக் கொத்துக் கடலை நிவேதனம் செய்து 24 முறை மௌன பிரதட்சனம் (வலம் வருதல்) செய்தால் குரு தோஷங்களும், பாவங்களும் நிவர்த்தியாகின்றது. விஷ்ணுவும், லட்சுமியும் பூசித்தது. மேலும் இங்குள்ள உற்சவ குருமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் மிகவும் புண்ணியமாகும். இதுபோன்ற உற்சவம் வேறு எந்த ஆலயத்திலும் கிடையாது. இந்த உற்சவமூர்த்தி வருடந்தோறும் நடைபெறும் தேர்த் திருவிழாவுக்கு எழுந்தருளுவார். சனகர், சனந்தனர். சனாதனர், சனத்குமாரர் ஆகிய நான்கு மூலவர்கட்கும் அருட்பாலித்த ஸ்தலம். மிகவும் புராதனமானது. இங்கு வருடந்தோறும் குருப் பெயர்ச்சி விழாவின்போது ஏராளமான பக்தர்கள் வந்து குரு பகவானின் திருவருளைப் பெற்று செல்கின்றனர். குரு பார்க்க கோடி புண்ணியம் என்பதற்கேற்ப தாங்களும், தங்கள் குடும்பத்தாருடன் இங்கு வருகைதந்து குரு பகவானின் திருவருளை வணங்கி குருவருள் பெற்று நிறைவுடன் வாழ வேண்டுகிறோம். கருடன் பூசித்து பேறு பெற்றது. பார்வதி அம்பாள் அவதரித்து ஈசனை மணந்த திருத்தலம். கோசார ரீதியாக குரு பகவான் அருள்வேண்டியும், குருபகவான் ஜன்ம ராசி 3 4, 6, 8, 10, 12-ல் இருக்கும்போதும், குரு திசை நடைபெறும்போதும் இங்குள்ள குரு பகவானை வழிபடுவோருக்கு வேண்டியன எல்லாம் கிடைக்கும். இத்திருக்கோயிலுக்கு ரூ. 10,00,000 செலவில் திருப்பணி செய்யப்படவுள்ளது. பெருநிதி அளித்து பேரருள் பெறுக.

குருவருள் பெற்று நிறைவுடன் வாழ்க!

எஸ். இராஜமாணிக்கம்
தக்கார் [ஆய்வர்

ஆர். இராதாகிருஷ்ணன், பி.காம்.
நிர்வாக அதிகாரி

ஆலங்குடி : கும்பகோணம் — மன்னார்குடி சாலையில் 17 கி.மீ. தொலைவில் தெற்கே அமைந்துள்ளது.
தஞ்சாவூர் — நீடாமங்கலம், நீடாமங்கலம் — கும்பகோணம் சாலையில் 7 கி.மீ. தொலைவில் வடக்கே அமைந்துள்ளது.

கந்தவேள் கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

திருப்பரங் குன்றத்தில் தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட செவ்வேட் பரமன் அங்கே சில நாட்கள் அம்மையாருடன் வீற்றிருந்தார். தேவர்களை விண்ணுலகத்தில் குடியேற்றவும், பொன்னுலகத்தில் இந்திரனுக்கு முடி சூட்டவும் திருவுளங் கொண்டார். தெய்வயானையம்மையாருடன் தம் திருக்கோயிலினின்றும் வெளியே புறப்பட்டார். வீரவாகு தேவரும் பூதர்களும் மகிழ்ச்சி யாரவாரம் செய்தனர். திருமால், பிரம்மா, இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் அவ்வாரவார ஒலியைக் கேட்டு முருகவேளைப் பணிந்து சூழ்ந்தார்கள். வாயுதேவன் மனோவேகத்தேரைக் கொண்டுவந்து நிறுத்தினான். ஆறுமுகக் கடவுள் தெய்வயானையம்மையாருடன் அத்தேரில் ஏறி அமர்ந்தார். அப்போது அவர்கள் சிவபெருமானும் மலைவளர் காதலியும்போல் விளங்கினார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். மயில் வாகனம் அமரர்கள் தொழ அருகில் வந்தது. ஆறுமுகப் பெருமான் அமரர்களைப் பார்த்து, ''நீங்கள் யாவரும் உங்கள் வாகனங்களில் ஏறி எம்மோடு விண்ணுலகத்துக்கு வாருங்கள்'' என்று ஆணையிட்டார். பெருமாள் ஆணையின் வண்ணம் அமரர்கள் தங்கள் தங்கள் வாகனங்களில் ஊர்ந்து எம்பெருமானின் இருமருங்கும் துதி செய்து கொண்டு சென்றார்கள். பராசர முனிவரின் புத்திரர்களும் உடன்சென்றார்கள். இரண்டாயிரம் பூத வெள்ளங்களும் விரைந்து புறப்பட்டன. பூதங்களில் பலர் முரசுகளை முழங்கினர். சங்குகளை ஒலித்தனர்; மிருதங்கம் முழக்கினர். இவ்வாறாக, கந்தவேள் விண்வழியே இந்திரனுடைய அமராவதியை அடைந்தார். பானுகோபனால் எரிக்கப்பட்டுப் பாழ்பட்டிருந்த விண்ணுலகை வேலாயுதக் கடவுள் புதுப்பிக்கத் திருவுளம் கொண்டார். தேவதச்சனை நோக்கி, ''விண்ணுலகை எல்லா வளங்களுடனும் மீண்டும் அமைப்பாயாக'' என்று கட்டளையிட்டார்.

தெய்வத் தச்சன் கந்தப் பெருமானின் ஆணையைச் சிரமேற்கொண்டு, விண்ணுலகத்தைச் சூழப் பொன் மதில்களையும், நான்கு வாயில்களையும், ஏழு நிலை மாடங்களையும், கோபுரங்களையும், எண்ணில்லாத வீதிகளையும், நடுவே ஒரு பெருங்கோயிலையும், செங்குன்றுகளையும், அளவில்லாத நீர்நிலைகளையும் அமைத்தான். மாளிகைகளையும் மணிமயமான மண்டபங்களையும் உண்டாக்கினான். தவப்பள்ளிகளை அழகுற அமைத்தான். இந்திரனுக்கும், பிரம்மாவுக்கும், திருமாலுக்கும் தனித்தனியாக கோயில்களை அமைத்தான். கந்தக் கடவுள் எழுந்தருளுவதற்கு ஏற்றதோர் திருக்கோயிலையும் தனியாக அமைத்தான். அழிந்த விண்ணுலகம் இப்பொழுது பிரமனின் சத்திய உலகத்தினும் வனப்புடையதாகவும், வளமுடையதாகவும் விளங்கியது. தெய்வத் தச்சன் மனத்தால் இவ்வாறு வளங்களையெல்லாம் சேர்த்து அமைத்த திறமையைக் கண்டு யாவரும் விம்மிதமுற்றனர். பிரம்மாவும் திருமாலும், தெய்வத் தச்சனிடம், ''உனது தொழில் திறமைக்கு நிகரில்லை'' என்று கூறிப் புகழ்ந்தார்கள். விண்ணுலகம் பெற்ற அழகைக் கண்ட இந்திரன் மகிழ்ச்சிப் பெருக்கினால் தெய்வத் தச்சனைக் கட்டித் தழுவினான். அமராவதியை அழகுற அமைத்த தெய்வ தச்சன் ஆறுமுகப் பெருமானின் திருவடிகளை வணங்கி நின்றான். ஆறுமுக வள்ளல் தெய்வத் தச்சனுக்கு அருள் புரிந்து தம் கணங்களுடன் நகரத்தினுள் சென்றார்.

அப்போது அயிராணி அரம்பையர்கள் சூழ ஒரு விமானத்தில் வந்து இந்திரன் கோயிலை அடைந்தாள். ஆறுமுகக் கடவுள் அந்நகருட் புகுந்து தெய்வயானையம்மையாருடன் சபா மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். பின்னர் மயில்வாகனக் கடவுள் திருமாலையும் திசைமுகனையும் நோக்கி, ''அமராவதியில் இந்திரனுக்கு விரைவில் முடிசூட்டுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

கந்தப் பெருமானின் கட்டளையை ஏற்ற தேவர்கள், சாமரம், குடை, வாள், கிரீடம் முதலிய அரச அம்சங்களையும், மற்றவற்றையும் உடனே கொண்டுவரச் செய்தனர். இந்திரனைக் கங்கை நீரினால் அபிஷேகம் செய்வித்தனர். ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துச் சிங்காதனத்தில் அமரச் செய்தனர். விண்ணவர் போற்றவும், கற்பக மலர் தூவவும் அரம்பையர் டாடவும், முழவுகள் முழங்கவும் மிகவும் சிறப்பாக இந்திரனுக்கு முடி சூட்டினார்கள். தேவர்கள் யாவரும் இந்திரனை வணங்கினார்கள். இந்திரன் எம் பிரமபிதாவாகிய கந்தக் கடவுளைத் தொழுது ''எந்தையே! சூரனையழித்து, அடியேன் இழந்த அரசுரிமையையும், பொன்னுலக ஆட்சியையும் மீட்டுத் தந்து என்றும் அழியா இன்

பத்தையும் நலத்தையும் வழங்கியருளினீர்கள் அடியேன் உய்ந்தேன். இதனினும் ஒருவன் பெறும் பேறு உண்டா? தங்கள் திருவடித் தொழும்பனாகிய என்னுடையதவமே தவம்'' என்று துதி செய்து நின்றான்.

'இந்திர! இனி நீ அஞ்சுந்தன்மையின்றி என்றென்றைக்கும் அமராவதியை அரசு புரிந்து இன்புற்று இருப்பாயாக'' என்று அருள்புரிந்து ஆசி கூறியருளினார் ஆறுமுக வள்ளல். பின் எல்லாத் தேவர்களையும் தத்தம் இடங் களுக்குச் செல்லும்படி பணித்தார்.

கந்தவேள் விண்ணுலகில் சில நாட்கள் தங்கியிருந்த பின் தெய்வயானை அம்மைய ரோடு கந்தவெற்பில் வீற்றிருக்கத் திருவுளங் கொண்டு புறப்பட்டார். அதனை அறிந்த அகண்டலன், அரவணைச் செல்வன், அம்புயன் முதலியோர் வந்து கந்தவேளைத் தொழு தார்கள். பெருமான் அவர்கள் புடை சூழத் தெய்வயானை அம்மையாருடன் தேரில் அமர்ந் தார். வீரவாகுதேவர் அத்தேரைச் செலுத்தி னார். இலக்கத்தெண்மரும், பூதர்களும் சூழ ஆறுமுகக் கடவுள் திருக்கயிலாயமலையை அடைந்தார். அன்னை, தந்தையை வணங்கி, அவர்களது திருவருளும் விடையும் பெற்றார். எல்லாத்தேவர்களுக்கும் தத்தம் இருக்கை செல்லுமாறு விடை கொடுத்துவிட்டுக் கந்த கிரியை அடைந்தார். வீரவாகுதேவர் முதலிய வீரரும், படைத்தலைவர்களும், பூதர்களும் துதித்துக் கொண்டு நிற்க, தெய்வயானை அம்மையாரோடு இரத்தின சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினார்.

''புக்கதோர் குமர மூர்த்தி பொருதிறல் வயவர் யாருந்
தொக்கனர் பணியில் நிற்பத் தொல்படைக் கணங்கள் போற்ற
மைக்கருங் குவளை ஒண்கண் மடவர லோடு மேவி
மிக்குயர் மணிப்பீடத்தில் வீற்றிருந் தருளி னானே''.

''துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்''.

விண்ணுலக ஆட்சியை முருகப் பெருமான் அருளால் மீளவும் அடைந்த இந்திரன் ஒருநாள் தான் முன்னர் சூரபன்மனுக்கு ஏவல் புரிந்த தையும், ஒளிந்து திரிந்ததையும் பிற துன்பங் களை அநுபவித்ததையும் எண்ணினான். விண் ணுலக போக வாழ்க்கையை வெறுத்துத்தவம் செய்ய நினைத்தான். தேவ குருவாகிய வியாழ பகவான் உலக வாழ்க்கையே உயர்ந்தது என்று கூறும் உலோகாயதக் கொள்கையை அவ னுக்கு உபதேசித்து அவன் எண்ணத்தை மாற்றினார். அவனும் மனம் மாறி தன் புதல்வன் சயந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்து

விட்டு, இந்திராணியோடு எந்நாளும் இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தனன்.

அரசு புரிந்து கொண்டிருந்த சயந்தன் ஒரு நாள் சபையில் வீற்றிருந்த வியாழபகவானை நோக்கி, 'தேவகுருவே! நான்முகன் முதலாய தேவர்களும் பிறரும் முன்னர் சூரபன்மனால் துன்பமுற்ற காரணம் யாது, என்றுவினவினான். வியாழபகவான் ''முன்னர் தட்சன் சிவபெரு மானை விலக்கிச் செய்த வேள்வியில் தேவர் களும் முனிவர்களும் கலந்து கொண்டதால் அவ்வாறு துன்பமுற்றார்கள் என்றுகூறி அந்த வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

(தொடரும்)



சித்திர பாரதம்
க.வ: செவ்வேள்
ப: MNRaja
வீமன் சடாசுரனை வதம் செய்த பிறகு பாண்டவர்கள் பத்ரிகாச்சிரமம் வந்து சில நாட்கள் கழிக்கிறார்கள். அதற்குப் பிறகு அஷ்டகோண மகரிஷியின் வனத்தில் ஒன்பது வருடங்களைக் கழித்து நந்திசேன வனத்திற்கு வருகிறார்கள்
ஒரு நாள் திரௌபதி ரிஷிபத்தினி மாருடன் நதியில் நீராடும் போது, அழகிய பொற்றாமரை மலர் ஒன்று மிதந்து வருகின்றது.
தேவீ இம்மலரைப் பாருங்கள்! எவ்வளவு சுகந்தமாய் உள்ளது.
இந்தப் பொற்றாமரை மலர் குபேர நந்தவனத்தில் பூக்கிறது. முன்னொரு முறை என் கணவர் இம்மலரைக் கொண்டு வந்திருக்கிறார்.
எங்களுக்கும் இந்த மலர் வேண்டும். தேவி! உங்கள் கணவரைக் கொண்டு வரச் சொல்லுங்கள்
அப்படியே செய்கிறேன்.
தருமரிடம் கூறாமல் மீண்டும் குபேரபுரி வந்து சேருகிறான் வீமன்.
வீமன் மலர் பறிப்பதைக் காணும் வித்தியாதரர்கள், சேனைத் தலைவன் மணிமானிடத்தில் வந்து கூறுகின்றார்கள்.

வெளியிடுபவர் ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் தமிழரசு அச்சகம் அரசினர் தோட்டம், சென்னை-600002.



அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்

கொன்னையூர்

திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

பங்குனிப் பெருந்திருவிழா அழைப்பிதழ்

இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கி வரும் கொன்னையூர் அன்னை முத்துமாரியம்மன் பங்குனிப் பெருந்திருவிழா கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறவுள்ளது.

15—3—1992	ஞாயிற்றுக்கிழமை இரவு	பூச்சொரிதல் விழா
16—3—1992	திங்கட் கிழமை மதியம்	அக்கினிக் காவடி விழா
22—3—1992	ஞாயிறு இரவு	காப்புக் கட்டுதல்
25—3—1992	முதல் மண்டகப்படி விழா	
5—4—1992	பொங்கல் பெருந்திருவிழா	
6—4—1922	,, ,,	
7—4—1992	,, ,,	

சிறப்பு மிக்க இப்பங்குனிப் பெருவிழாவிற்கு பக்தர்கள் அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து அன்னை முத்துமாரியை தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு எய்த வேண்டுகிறோம்.

எம். சேதுராமலிங்கம், பி.ஏ.,
தக்கார்

ப. குப்புசாமி, பி.ஏ.,
செயல் அலுவலர்

பதிவு எண். ம். 7039

தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 2.3.92 அன்று நடைபெற்றது. வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிக்கிறார்கள். வாரியத்தின் செயலாளரும் அறநிலையத்துறை ஆணையாளருமான திருமிகு சுகவனேஸ்வர் ஐ.ஏ.எஸ் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் உடன் உள்ளார்கள்.